# THE MOST EDUCATIVE
# NTERESTING & INSPIRING

# TAMIL BRAIN TEASERS
# TO ENTERTAIN
# & ENLIGHTEN

இன்பப் பொழுது போக்கிற்கு ஈடு இணை
ற்றதாய் இதுவரை எவரும் வெளியிடாதது.

# புதுமைப் புதிர்கள்



திரட்டியவர் :

பண்டிதர் K. J. வேதமுத்து

சென்னை 10] 1971 [விலை ரூ. 1-40 ந. பை



Pandit: K. J. Vethamu

# Children's Delight

## சிறுவர் அறிவுக்கதிர்

ஈரோட்டில் ; தோற்றம் 1935௵
நிறுத்தம் 1947௵

நடந்தகாலம் : 12 ஆண்டுகள்.
ஆண்டு 1971 புதுப்பித்தில்
விவரம் அட்டை 3ம் பக்கம் பார்க்கவும்

### (வரலாறு விளக்கம்)



இது தமிழ் நாட்டில் சிறுவர்க்கென்று முதன் முதல் தோன்றியமாதத் தமிழ் இதழ். மேனாட்டவரைப்போல நம் தம் தமிழ் மொழியில் சிறுவர்க்கென ஒரு மாத இதழ் இல்லையென்ற இழிவைப் போக்கவே இப்படத்தில் இருக்கும் அடியேன் பொருள் வருவாயைக் கருதாது 1935-ம் ஆண்டில் தொடங்கினேன். நமது தமிழ் நாட்டுப் பெரியார் **E.V.** ராமசாமி நாய்க்கர் இதனை அச்சிட்டு உதவினார்கள். பேரறிஞர் **C.N.** அண்ணாதுரை, அக்காலக் கல்வி மந்திரியார் வர்க்கீஸ், பள்ளித் தலைவர்கள் கல்வி அதிகாரிகள் இதற்குப் பேராதரவு அளித்து வர, நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமாக வளர்ந்து தமிழ்நாடு, இலங்கை, தென்னாப்பிரிக்கா, முதலிய இடங்களில் பரவிய பெருமை பெற்றோங்கியது: சுமார் ஆயிரம் சந்தாதார் போல் இருந்தார்கள்.



1947-ம் ஆண்டு, அடியேன் இதனைச் சீரும் சிறப்புமாக நடத்த சென்னை வந்தேன். ஆனால், தமிழ்ப் பண்டிதர் பணி, E.S.L.C. உரை நூல்கள், வினாவிடை நூல்கள் மேனாட்டவருக்குத் தமிழ் கற்றுக் கொடுத்தல் ஆகிய பல பணிகளில் ஈடுபட்டமையால் அதை இதுவரை நிறுத்திவைக்க நேர்ந்தமைக்கு மிகவும் வருந்துகிறேன்.

ஆயினும், என் மாணவர்களுள் தமிழ் நாட்டில் ஆயிரக் கணக்கானவர்களும், மேல் நாட்டவருள் நூற்றுக் கணக்கானவர்களும் என்னை மறுமுறையும் புதுப்பித்து, முந்தின நிலையிலும் அதிகம் சிறப்பாக நடத்த வேண்டுமென்று என்னைத் தூண்டினமையால் அவர்கள் விருப்பத்துக்கு இணங்கி 1971 புதுப்பிக்க, எல்லா முயற்சிகளும் வெகு தீவிரமாக நடந்து வருகின்றன. நன்கொடையும் பலர் ஆங்காங்கு திரட்டுகின்றனர். இம்முயற்சியில் ஈடுபடும் எனக்கு இதனைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் ஒத்தாசையும், ஆதரவும் தர வேண்டுகின்றேன்.

நன்றி கலந்த வணக்கம்,

இங்ஙனம் உங்கள் அன்பன் **K. J. வேதமுத்து**

அறிவு பெருகி ஓங்க
ஆனந்தம் ததும்பிப் பொங்க
ஆக்கிய அரிய நூல்


# BRAIN TEASERS

# புதுமைப் புதிர்கள்

## இன்பப் பொழுது போக்கிற்கு ஈடு இணையற்றது

தொகுத்தவர் :

பண்டிதர் K. J. வேதமுத்து



Pandit. K. J. VETHAMUTHU

1. தமிழ் ஆசிரியர்-வெளி நாட்டவர், அமெரிக்கர், ஐரோப்பியர்-தமிழரல்லாதார்

2. முன்னாள்

(1) தமிழ்ப் பண்டிதர்: போதனை முறைப்பள்ளி ஈரோடு உயர் நிலைப்பள்ளி, சென்னை.

(2) தலைமை ஆசிரியர் ஈரோடு.

(3) சிறுவர் அறிவுக்கதிர் திங்கள் வெளியீடு ஆசிரியர், (1 ஆண்டு)

(4) அரசாங்க (E.S.L.C.) உரை நூல், வினாவிடை நூல்களின் ஆசிரியர்.

(5) மாணவனாக மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் மாகாண முழுமைக்கும் முதல்வனாகப் பரிசு பெற்றவர்.

வெளியிடுபவர்
"சிறுவர் அறிவுக்கதிர்" செயலகம்
8ம் குறுக்குத்தெரு, 206 T.P. சத்திரம்
கீழ்ப்பாக்கம், மதராஸ்-10.

—★—

ஒரு வேண்டுகோள்

இந்த முன்னுரையை முழுதும் வாசித்து முடிவு செய்யுங்கள்



# முன்னுரை

தமிழ் நாட்டின் தனிப்பெரும் ஆசிரியப்
பெருமக்களே! பொதுமக்களே!
வணக்கம் பல :

இப்புதுமைப் புதிர்கள் பூராவும் ஒரு நாள், ஒரு திங்கள், ஓராண்டில் திரட்டப்பட்டவை அன்று, அடியேன் "சிறுவர் அறிவுக்கதிர்" என்ற திங்கள் இதழை ஈரோட்டில் 1935ம் ஆண்டு முதல் 1947ம் ஆண்டு முடிய பன்னிரண்டாண்டு பெரியார் E. V. இராமசாமி நாயக்கர் அவர்கள் அச்சிட்டு உதவி வந்த காலத்தில். "விடுகதைப் புதையல்" என்னும் நூலையும், பின்னர் "விடுகதைகள்" என்ற சிறு நூலையும், வெளியிட்டு அடைந்த அனுபவத்தின் விளைவாக இப்புதுமைப் புதிர்கள்" வெளிவருகின்றன என்று கூறிக்கொள்வதில் மிக்க குதூகலம் கொள்ளுகிறேன்.

இந்நூல் சிறியோர் முதல் பெரியோர் வரை வாசித்து, ஒருவருக்கொருவர் புதிர்போட்டு இன்பப்பொழுது போக்கவும், மக்கள் மனமகிழவும் தோன்றிய நூல்களுள் இதுபோன்ற நூல் இதுவரை யாரும் வெளியிடவில்லை என்பது என் சிற்றறிவுக்கு எட்டுகின்றது.

ஆகவே, தமிழ் நாட்டுச் சிறுவர் சிறுமியரே! பெரியோர்களே! இந்நூல் மூலம் கிடைக்கும் பொருள் உதவியைக் கொண்டு பன்னிரண்டு வெளிவந்த சிறுவர் அறிவுக்கதிரைப் புதுப்பிக்கவும், இன்னும் அடியேன் எழுதி வைத்திருக்கும் பல சிறந்த நூல்களை வெளியிடவும், பெரிதும் திட்டமிட்டுள்ளேன்.

அதனால் இதனைக் கண்ணுறும் அன்பர்களும், நண்பர்களும், பள்ளி மாணவ மாணவிகளும் இதனைப் பெற்று இன்புறுவதுபோல, உங்கள் நண்பர்களும் இதனைப் பெற்றுப் பெருமகிழ்ச்சி அடையப் பேருதவி புரிய வேண்டுமாய் வேண்டிக் கொள்ளுகிறேன். வணக்கம்.

இப்படிக்கு
தமிழ் நாட்டின் மக்கள் அன்பும்
ஆதரவும் அபரிமிதமாய் அடைய
ஆவல் கொண்டு நிற்கும் நூலாசிரியன்
K. J. வேதமுத்து

சென்னை
10-1-1971

# புதுமைப் புதிர்கள்

☞ குறிப்பு—எவ்வெவ்விடங்களில் "என்ன", என்பதைச் சேர்க்க முடியுமோ, அவ்வவ்விடங்களில் சேர்த்துக் கொள்ளவும்.

1. பார்க்கப் படிக்கப் பலருக்கு உதவுவது,
பருவம் முதிர்ந்தவர் பார்வைக்குகந்தது,
பைக்குள்ளே பார்க்கலாம், பகருமிதனை;

2. வெயில் காலத்தில் விரும்பித் தேடுவது
வியர்வையைப் போக்க வீசிக் கொள்ளுவது
வீதியில் விற்கும், விலைக்கு வாங்குவோம்.

3. விடிய விடிய வெள்ளி ஓடம் ஓடினது,
விடிந்து முடிந்ததும் ஓடி ஒளிந்தது.

4. பகலிலே பார்க்கக் கிடைக்காது,
பகல் மறைந்ததும் பார்க்கலாம் எங்கும்,
பனிச்சென்று மின்னும் பல்லாயிரம் பளிங்கு
பரந்த வானில் நிறைந்திருக்கும்.

5. குண்டும் குழியுமாய் மேல்புறம் இருக்கும்,
உண்டு உட்புறம் சதையும் விதையுமாய்,
கண்டு வாங்கித் தின்று பார்த்தால்
நன்று ருசி என நாவில் சொல்லுவோம்.

6. வட்ட வடிவத்தில் தட்டின் மேலே
சுட்ட பொருள்கள் எட்டுக்கு அதிகம்
பட்டுப் போலப் பார்க்கத் தெரிந்தது,
துட்டுக்கு வாங்கி சட்டென்று தின்றேன்.

7. ஒன்றின் மேல் ஒன்றாய் உருண்டைகள் கண்டேன்,
ஒன்றை வாங்கி மென்று தின்றேன்,
நன்றாய் இருந்தது, இன்னொன்று வாங்கினேன்
இனிப்பானது. இதற்குமேல் வேண்டாம்
என்று சொல்லி ஏகினேன் இருப்பிடம்.

8. முறுக்கி எடுத்த கயிற்றைப் போல
சுருக்கிச் சுட்டுத் தட்டிலிருந்தது,
சுட்ட பாட்டிக்குத் துட்டுக் கொடுத்தேன்,
சுருக்காய்க் கொடுத்தாள்,சும்மா தின்றேன்,
சுகமாய் இருந்தது,சொல்லு பார்க்கலாம்
நல்ல இதன் பேர்.

---

இதற்குரிய விடைகளைக் கடைசிப் பக்கம் பார்க்கவும்

9. அறுத்து வைத்த செங்கல்போல அழகாய்த்
தட்டில் அடுக்கியிருந்தன. ஆசையாக
அதில் ஒன்றுக்குக் காசைக் கொடுத்தேன்.
ஐயர் தந்தார், பையத்தின்றேன், அதன்பேர் என்ன ?

10. தலையைத் தாக்கும் வெயிலைக் காக்க
தக்க உதவியாய் மிக்க தேவை,
ஒக்கப்பெய்யும் உழவு மழைக்கு
உதவாது போகும், உண்மை சொன்னேன்,
உமக்கு இதன் பேர் உரைக்கத் தெரியுமா ?

11. அகில லோகத்துக்கும் அமிர்தமாய் இருப்பது
அளவுக்கு மிஞ்சினால் அழிவைக் கொடுக்கும்,
அது அற்று விட்டால் அழிந்திடும் உலகம்
அனுதினம் நமக்கு அத்தியா அவசியம்.

12. நிலவுலகெங்கும் நிறைந்து இருப்பது,
நிறம் குறி என்பது ஒருவரும் அறியார்,
நீயும் நானும் உணரமுடியும் காணமுடியாது,

13. படர்ந்து ஓடிய செடிகளுக்குள் பானை சட்டிபோல்
பலவிதக் காய்கள்
படுத்துக் கிடந்தது, பார்த்தேன்; பறித்தேன்,
எடுத்து அறுத்துத் தின்னக் கனருசியாய் இருந்தது.

14. காய் காய்த்துப் பழம் பழுக்கக் காத்திருந்தேன் அம்மா
காய் வெடிக்கக் கண்டதெல்லாம் காற்றில்
பறந்தது சும்மா.

15. குத்துக் குத்தாய் வளர்ந்து சத்து நிறைந்த செடியிலே,
கோழித் தலைபோல கோணல் மாணல் காய்கள்,
அத்தனையும் வெடித்தது ஆகாயத்தில் பறந்தது,
ஆசைக்கு ஒரு சுளை இல்லை.

16. மேலெல்லாம் பச்சை முள்ளு, உள்ளெல்லாம்
வெள்ளிக் கயிறு. வெள்ளிக்கயிறு,
மூடிக்குள் நல்ல பொருள் உள்ளது
மெள்ள எடுத்து தின்று பார்த்தால் வெகு
ருசியாயிருக்குது.

17. குளவிக் கல்லைப் போல காய்கள்,
கொடி படர்ந்த செடி அடியில்

குவிந்து கிடந்ததைக் கொண்டு வந்தேன் நான்
கூட்டுக் கறிக்கும் கூடித் தின்னவும்
வாட்டமாய் இருந்தது வழுந்துவீர் இதன் பெயர் ?

18. வாது இல்லாத மரம், வயிரம் இல்லாத மரம்,
வாழ்நாளெல்லாம் வருஷம் ஒன்றே,
வயல் நிலத்திலும் வாழ்வீட்டுப் புறத்திலும்
வளமான மரத்தை மககள் நீர் காண்பீர்.

19. எல்லாருக்கும் முன்னே எழுந்திருக்கும்,
சொல்லாமல் சொல்லித் தூக்கம் கலேச்கும்,
நல்லதோர் பறவை நம் வீட்டுப்பறவை.

20. கூரை சுவர்களில் கூசாமல் ஏறும்,
கூச்சல் போட்டால் குறி பார்க்கப் போவோம்
குதூகலம் கொள்வோம், கூடவே அச்சம்,
கொள்வோம் குறிப்பினுலே கூறுவீர் இதன் பெயர் ?

21. காயாய் இருக்கையில் துவர்க்கும், கறிக்கும் உதவும்,
கனியாய் இருக்கையில் இனிக்கும்,
இன்பமாய்த், தின்போம்,
கடைகளில் எங்கும் காண்பீர் இதனே,
காசுக்கு வாங்கும் இதன் பெயர் கழறுவீர்
அறிந்தால்.

22 காடு குகைகளில் பகல் எல்லாம் கழிக்கும்,
நாடும் இரைக்கு நள்ளிரவில் கிளம்பும்,
கூடும் ஒன்ருய்க் கூக்குரல் இட்டிடும்,
குச்சுவால் மிருகம் பெயர் கூறுவீர் தெரிந்தால்.

23. பூவுக்குள் அரசு இருந்தால், புரியும்படி சொல்லு.

24. அடைக்கத் திறக்க ஆகும் அல்லது,
அந்தப் புறம் இந்தப் புறம் அடி எடுத்து வைக்காது.

25. ஒரு ஜாண் குளத்திலே அரைஜாண்
குழவி கிடக்குது, அது அங்குமிங்கும் அசையுது.

26. உடலெல்லாம் மேடுபள்ளம் உள்ளகாய்,
உவக்கும் இக்காய்க்கு உரிய பெயர்கூறு ?

27. தட்டினுலும் ஓசையிடும், கொட்டினுலும் ஓசையிடும்
கெட்டியான கலம் என்ன கலம் ?

28. வாராவாரம் கூட்டம், கூட்டம் கூடவே, கூச்சல்,
கூச்சலுக்குள்ளே கொள்ளுகிருர்,
மக்கள்தம் சோரும் பொருளே.

29. இரு துவாரச் சிறுகுழாய், இழுக்குது காற்றை உள்ளே,
இழுத்த காற்றை அது அழுத்தித் தள்ளுது வெளியே.

30. உயிரில்லாத ஒரு பொருள்
உயரப்பறக்குது, உலகெல்லாம் சுற்றுது.

31. தடித்துப் பெருத்துத் தழைக்கும், கொழைக்குத் தட்டில்லா
மரத்துக்குத் தரைமுட்டத் தாடிகள் தொங்குது.

32. ஆழக் குழிக்குள்ளிருக்கிறன், நீளமான குண்டன்
அகப்பட்டதையெல்லாம் அரைத்துத் தள்ளுகிறன்.

33. பள்ளத்தைக் கண்டால் துள்ளிப்பாயுது,
மேட்டைக் கண்டால் மேலேறத் தயங்குது.

34. ஐந்து பேர் அண்ணன் தம்பி, அண்ணனின் உதவி
அற்றுப்போனல் அவதிப்படுவார் தம்பிமார்.

35. படல் படலாய் இருக்கும் இலைகள்
உடலெல்லாம் ஊசிபோல் முள்.

36. வந்ததெல்லாம் வாங்கிக் கொள்வாள் வல்லாளகண்டி
வாங்கினதொன்றும் வழங்கத் தெரியாள் வல்லாளகண்டி;

37. கோலிக்குண்டு போலப்பழங்கள்
குலை குலையாய்த் தொங்கும்,
கண்டு பறித்துத் தின்றுப் பார்த்தால்
கல்கண்டு போல் இனிப்பு.

38. உருண்டு நீண்ட உருவம் உட்கார்ந்தே இருக்கும்,
திறந்தவாய் திறந்தே இருக்கும், வந்தவர்
போனவர் போட்டதை வாங்கிக் கொள்ளும்.

39. வெள்ளை நிறக்கல் வெயில் பட்டால் உருகுது.
கையில் பட்டால் கரையுது.

40. உருண்டைக் குன்றின்மேல் ஓராயிரம் கரும்பயிர்,
அறுபது ஆண்டு கண்டதும்,
அத்தனையும் வெண்ணிற வெறும் பயிர்.

41. கோடி கோடியாய் மலர்ந்த மலர்கள்
கோழி கூப்பிட ஓடி மறைந்தன.

42. அறை அறையாய் அழகான கூடம்,
அதற்குள் நடக்குது, அற்புத பாடம்.

43. குட்டைக்கால் எட்டு, நெட்டைக்கால் எட்டு,
ஒற்றைக் கம்பத்தில் அவை ஒட்டிக் கொண்டிருக்கின்றன,
அத்தனையும் மூடியிருக்குது அழகு சித்திர ஆடை.

44. திண்ணைக்கு அப்பால் தெருவில் கிடக்குது,
உண்ணத் தின்ன உதவிய பண்டம்.

45. தோசைக் கரண்டி போலத் தோன்றும் இரு உருவம்,
உருவம் ஒன்றுக்கும் உள்ளது ஐந்து முனைகள்,
முனைகளினால் முடிக்கலாம் எத்தொழிலும்,
விளையும் செயல்கள் விநோதமாகும்,
விளக்கம் தெரிந்தால் விவரமாய்க் கூறுவீர்.

46. வெட்ட வெட்டத் தழையுது, வெள்ளைநிற
விநோதப் பொருள், வெட்டாமல், வளரவிட்டால்
வெகுவாய்ப் பிறும்; சீறும்.

47. குச்சி போலக் காய்கள் உச்சிவாதில் தொங்குது,
நச்சி வாங்கி நாமெல்லாரும் மெச்சிக் கறி சமைக்கலாம்

48. பட்டைகள் பல கொண்ட நெட்டை மரத்தில்,
பகட்டும் நிறத்தில் பச்சை, பள பளப்பு மஞ்சள்,
பார்ப்பவர் கண்ணைப் பறிக்கும் சிவப்புப் பழங்கள்,
பார்த்தால் இம்மரம் பெயரைப் பகர்வீர் நீரே.

49. காயோடு போடலாம் ஒரு உப்பு,
காலில் மாட்டலாம் ஒரு உப்பு,
காய்ந்ததை எரிக்கலாம் ஒரு உப்பு,
கருத்தாய் உப்புகள் தெரிந்தால் உரைப்பீர் ?

50. அழகு இரத்தின அலங்காரி, அங்குமிங்கும், அலைவாள்
அந்த நல்ல சிங்காரி, அவளைக்காண ஆசைப்பட்டால்
மழை வரக் காத்திரு.

51. தட்டையாகத் தடித்த இலை மரம்,
வெட்டும் வாள் போல் கிட்டும் இலைகள்,
பட்டு நூல் உள்ளே படர்ந்த இலைகள்
சட்டம் விட்டம் சற்றும் ஆகா.
இட்ட பெயர் என்னவென்று சொல் ?

52. கொல்லைப் புறத்திலே கொடி படர்ந்திருக்குது,
கொடிகள் மேலே கொத்துக் கொத்தாய் காய்கள்,
குவிந்து நின்றன கோணக் கால் பந்தல் மேல்,
குழம்புக்குப் பறித்தேன் விளம்புவீர், இதன்பேர்

53. வெள்ளை மல்லி போல் பூப் பூத்தது,
விரும்பும் பச்சையாய்க் காய் காய்த்தது,
பருந்து நிறத்தில் பழம் பழுத்தது,
அருந்துவதற்கு ஆகாதபழம் என்னபழம்?

54. மூலே முடக்கிலே ஒளிந்து கிடந்து,
மாலே இருட்டில் வேலையைத் தொடங்கி,
காலே வரைக்கும் கண்டபடி திருடி,
வேலையை முடிக்கும் வீரசூரன்,
வீட்டுக்குப் பின்புறம் விரும்பினல் காணலாம்.

55. பூவுக்குப் பூ போகும் பிராணி,
பூவின் நீரைப் பொருந்த அருந்தும்,
போதியதை அருந்தி மீதியை சேர்க்கும்,
பொக்கிஷமதனை பொல்லாத் திருடன்,
பொட்டென்று கண்டு சட்டென்று சாப்பிட்டான்.

56. உனக்கும் எனக்கும் உரியது ஒரு உறுப்பு,
ஊரையும் பேரையும் புகழையும் பெருமையும் தரும்,
யாரும் கண்டது, பாரும் பகர்ந்தது சரியா ?

57. சரிந்த சிறுகுன்றின், இருபுறம் சம்பந்திமார் இருவர்,
சத்தம் என்பதைச் சற்றும் செய்யார்,
சத்தம் செய்வாரைச் சட்டென்று அறிவார்,

58. இரண்டும் ஒன்று, போல், கண்ணுடிக்குண்டு
கண்ணுடிக்குண்டில் கரும்பட்டை உண்டு.
காட்சியைக் காண கட்டாயம் தேவை:

59. வனேயாக் குயவன் வனேந்த உருவம்,
வாகான உருவம் வண்ண உருவம்,
ஓடும் பாடும் நடக்கும் நடிக்கும்,
நாகரிக உருவம் நல்ல உருவம் என்ன உருவம்?

60. கொழு கொழு வெணணெயைக் கொளுந்து
இலேயில் தடவி, கொட்டைத் தூளேத்தூவிக்
குழையக் குழைய மெல்ல விளேய வந்தது இரத்தம்.

61. குளவிக் கற்கள் கொடிகளுக்கு அடியிலே,
குவிந்துக் கிடக்குது கொல்லேப் புறத்திலே.

62. ஈட்டிகளுக்கு இடையிலே, எலும்பில்லாதவன்
எட்டியும் முட்டியும்,
எவ்வித சேதமும் இல்லாதிருக்கிறுன்.

63. கண்ணுடிக் குண்டு காற்றிலே பறக்குது,
கையிலே தொட்டதும் காணுமல் மறையுது.

64. பழக்கடைக்குப் போனேன், பார்த்தேன் ஒரு அதிசயம்,
பச்சை, சிவப்பு, பகட்டு மஞ்சள், மெச்சும் நிறத்தில்,
மேல்தோல் இருக்க, நச்சி உரிக்க நான் கண்டேன்

உள்ளே இருந்த வெள்ளைப் பொருளை ; விரும்பி
உண்டேன், விந்தைப் பழத்தை.

65. வீட்டிலே இருக்கிறான் கூட்டுக் கள்ளன்,
விடிய விடிய கொள்ளை அடிக்கிறான்,

66. அதிகாரம் பண்ணுது ஒரு மான்,
ஆணிகள் செய்யுது ஒரு மான்,
அறிவு நிறைந்தது ஒரு மான்,
அறிந்து சொன்னால் அறிவாளி யாவார்

67. காட்டில் திரியுது கரும்பூத உருவம், காது இரண்டும்
கட்டை முறம், கால்கள் நான்கும் கல் தூண்கள்,
வால் ஒன்றும் விளக்குமாறு, கொம்பு இரண்டும்
குத்தீட்டி, கைகொன்றும் காணும் குழாய் போல்,
கதையை விடுவித்தால் கையெடுத்துக் கும்பிடுவேன்.

68. கடுகு அளவு விதை போட்டேன், காடு பரவும் மரமாச்சு
நாடும் படைக்கும், நன்மக்களுக்கும் நல்ல நிழலாச்சு,
வீடில்லாப் பறவைக்குக் குடியிருக்கு மிடமாச்சு
தேடும் மரத்தைத் தெரியச் சொன்னால் தேனும்,
தினைமாவும் தின்னக் கொடுப்பேன்;

69. சட்டி போல உருவம் சகலருக்கும் உண்டு,
கிட்டியதெல்லாம் விட்டிடாது கொள்ளும்,
பட்டப்பகல் வருமுன்னே கொட்டிடும் கொண்டதை,

70. எல்லாருக்கும் இருக்குது; இரு சிறு சிமிழ்,
அவை அற்புதச் சிமிழ், அழகு சிமிழ், ஆச்சரியச்
சிமிழ், தானே மூடும், தானே திறக்கும், இரு
சிமிழுக்கும் இருக்காது ஒரு வித்தியாசமும்,

71. தள்ளாடித் தடுமாடி நடக்கும் ஒருபறவை
நல்ல இறகு இருந்தும் பறக்காத பறவை,
உள்ளபடி உரைத்தால் உட்காராது அவயம்.

72. செக்கச் செவேர் எனச் சிவந்த பழங்கள், தக்க ரசம்
குழம்புக்குத் தகுந்த பழங்கள், பக்குவமாய்ப் பாகம்
பண்ணலாம், பானமும் பருகப் பண்ணலாம், பாரீர்.

73. ஒரே இனக் காய்கள், கறிக்கான காய்கள், உருவத்தில்
அவைகள் இருவகை தெரிந்தேன், ஒன்று மத்தள
உருவம், மற்றது மண்சட்டி உருவம்.

74. சந்திரன் கிளம்பச் சந்தோஷமடைவர் சிலர்,
சஞ்சலப்பட்டு சங்கடப்படுவர் சிலர், சங்கதி
தெரிந்தால் சரியாய்ச் சொல்லும், பார்ப்போம்.

75. குழம்புக்கும் இரசத்துக்கும் குணமான பழங்கள்,
கொஞ்சும் சிவப்பில் அஞ்சாறு உருவம், மிஞ்சும்
நெல்லி, மிளிரும் எலுமிச்சை, மிகு நாரத்தை,
நாலுவித உருவம் நான் கண்டேன்.

76. இரவு நேரம் தான் எங்கள் அரசும்; ஆட்டமும்,
இரவு கழிந்ததும் எடுப்போம் ஓட்டம், இன்னது
என்று தெரிந்தால் எனக்கு உரைப்பீர் ?

77. டந்து மட்டைக் குச்சிப் பையனுக்கு
பனங் கொட்டைப் பருமன் உருமால்.

78. போகும் இடமெல்லாம் என்னைப் பின்பற்றி வருகிறான்..
ஓட்டிப் பார்த்தேன், உதைத்துப் பார்த்தேன்,
ஒரு துளி கூட நகரவில்லை.

79. ஓய்வு கிடையாது; ஓழிவு கிடையாது; ஒருநிமிடமும்
உட்காருவதில்லை. உனக்கும் எனக்கும் உகந்த பொருள்.

80. காசு பணம் அதிகமில்லை கண்ணுடிப் பொருளுக்கு;
கண்ட இடம் கையில் வாங்கி வாயில் போடலாம்
கண்ணுடிப் பொருளை.

81. வீட்டிலிருக்கிறான் ஒருவன், வெளியில் திரிகிறான் ஒருவன்,
ஒருவரை ஒருவர் கண்டு விட்டால் ஓயாச் சண்டை.

82. கொடியாய் ஓடிய செடி எல்லாம் இலை,
கோடி மக்கள் இலையைக் கொள்வார் விலைக்கு,
நாடிடும் திருமணம் நாளைக்கு வேண்டும்.

83. அள்ளக் கிள்ள அகப்படாப் பொருள்,
எல்லாருக்கும் தேவை எந்நாளும் வேண்டும்,
சொல்லத் தெரிந்தால் வல்லவர் என்பேன்.

84. பல பல நிறத்திலும், பல பல அளவிலும்,
பார்க்க இருக்கும் பலன் தரும் காய்கள்,
பதார்த்தம் செய்ய நிதம் நிதம் வேண்டும்.

85. உறியிலே சட்டிபோலத் தரையில் உட்காரும், கிடக்கும்;
உடல் முழுவதும் மேடும் பள்ளமும்:
உணவுக்காக ஊரார், உவப்புடன் வாங்குவார்.

86. பச்சைப் பசேர் நிறத்தில் பழுத்திருக்கும் பழம்,
இச்சைப்பட்டுத் தின்ன இதனை நாம் வாங்குவோம்,
மெச்சும் சிவப்பாக உள்ளே தசை இருக்கும்,
அச்சமின்றி அறுத்தால் அவ்வளவும் கறுப்பு விதை,
இவ்வளவும் தெரிந்தபின் இதன் பெயர் என்ன சொல்லு.

87. தட்டை மீன் தசை உள்ள மீன், ஜாண்
நீளத்தில் காணும் மீன், தண்ணீரில்லாக்
குட்டையில் துள்ளுது, துடிக்குது.

88. எள்ளுக்கும் சற்று உருவத்தில் பெருத்தவன்,
கள்ளத்தனமாய்க் கடிக்கிறான் மக்களை,
மெள்ள இரத்தம் உள்ளுக்கு உறிஞ்சுறான், யார்?

89. காலோ கிடையாது, காடெல்லாம் அலைகிறான்,
காதோ கிடையாது, பேசுவதைப் புரிகிறான்
கடித்தால் மக்கள் துடித்து மடிகிறார்.

90. ஊதும் நாதசுரம் போல் உள்ளது வெள்ளைப் பூ.
உருண்டைப் பந்துக்காய் உடலெல்லாம் முள்
உண்ண எவருக்கும் உதவாத காய்
உலகினர் மருந்துக்கு உரிய காய்.

91. அற்புதச் சிறு குழல்; அழகான அருங்குழல்,
அதிலிருந்து ஒழுகுவது ஆயிரம் பேரையும்
அழப்பண்ணும், அல்லது ஆனந்திக்க வைக்கும்,
அறிந்தால் பெயரை அனைவர்க்கும் சொல்லு.

92. குத்துச் செடியிலே கொத்துக் கொத்தாய்க் காய்கள்
அத்தனையும் பழுத்து அழகாய்ச் சிவப்பு சுத்த
நிறத்தில் தோன்ற, நான் பறித்து நத்தித் தின்றதும்
நாவு வெந்தது, நானும் கதறினேன்.

93. நாற்றப் பொருளை நல்லுணவாய் உண்ணும்
சேற்றுநீரைத் தினமும் குளிக்கும்,
கூற்றுவன் நிறத்தில் தோற்றம் அளிக்கும்
சாற்றுவீர் இந்தத் தனி ஜீவன் பெயர்.

94. கண்ட இடமெங்கும் உண்டு இப்பொருள்.
கண்ணாலே எவரும் கண்டதே இல்லை,
உன்னாலும் என்னாலும் உணர முடியும்;
சொன்ன இப்பொருளை சொல்லுங்கள்: பார்ப்போம்.

95. கூடாரம்போல குவிந்த மரத்தில் கோடி கோடியாய்க்
கனிகள் காணத் தொங்குது,
நாடிப் பிடுங்கி நாவில் வைக்க, நல்ல ருசியாய்ச்
சொல்ல வெகுவாய்த் தூண்டப் பண்ணுது.

96. ஒருதரம் காய்காய்த்துப் பழம் பழுத்து,
மறுதரம் மரணம் அடையும் மரம் என்ன மரம்?

97. கோணக் கோணக் காய்கள் கோடி கோடியாய்த் தொங்குது,வேணும் வேணும் என்று விரும்புவார் பலபேர் கூட்டுக் கறிக்கும், குழம்புக்கும் இதனைக் கொள்வார் மக்கள்.

98. மேகமில்லா வானத்தில் மின்னலும் இடியும் மிகுதியாய்க் கேட்குது, மழை பெய்வ தென்பதோ மருந்துக்கும் இல்லை.

99. வட்ட வடிவம், வாகான உருவம், வாய் திறந்த மண் உருவம், உருவத்தின் தலைமேலே உட்கார்ந்திருக்குது மூன்று கட்டிகள், உணவைச் சமைக்க உதவும் உருவம், என்ன உருவம் ?

100. தகதக தங்க மேனியன், தண்ணீரில் குளிக்கத் தாவிக் குதித்தான், குதித்த நேரமே குன்றினன் நிறத்தில், கூறும் கறுப்பாய் மாறிப் போனன்.

101. உடலுண்டு, ஒன்றுக்குத் தலையில்லை, கையுண்டு, அதற்கு விரலில்லை. இடுப்புண்டு காலில்லை, கேட்டவர் இதனை கிருபையாய்க் கூறுவீர்

102. கீழும் மேலும் கல்கட்டு, உள்ளே கிடக்குது கெண்டை மீன், கேள்விகேட்டால் கிளம்பும் வெளியே,

103. குண்டாந்தடி போலும், குடத்தின் உருப்போலும், குண்டுச் சட்டிகைக் கொண்ட கோலமாய்க் கொடியிலே தொங்கும் காய்; என்ன காய் ?

104. உள்ளுக்குள்ளே பொந்தாய், உடம்பெல்லாம் வரையாய், உருண்டை சட்டிக்கு ஒத்ததாய், உள்ளதொரு காய் கண்டால், உரைப்பீர் இக்காய்ப் பேர்.

105. உருண்டு திரண்ட கனி, உடம்பெல்லாம் கரடு முரடு; உள்ளிருக்கும் தசை உள்ளபடி இனிப்பு, உதிர்ந்திடும் விதையெல்லாம் கறுப்பு, உமக்குத் தெரிந்தால் உடனே சொல்லும்.

106. நீல நிறத் துப்பட்டி, நீண்டு விரிந்த துப்பட்டி, நீயும் நானும் மடிக்க முடியாத துப்பட்டி,

107. கண்ணுண்டு காதில்லை, காலில்லை வாலுண்டு, கண்ணுலே கண்டவர் எல்லாம் காற்றாய்ப் பறக்கினர்.

108. பச்சைக் கம்பளம், பரமன் பண்ணின கம்பளம், பல பேர் வந்து கூடி இருந்து பழங்கதை பேச ஆகும் கம்பளம், பரந்த வெளியில் பார்ப்பீர் இக்கம்பளம்.

109. கொத்துக் கொத்தாய்க் காய்காய்க்கும், கொல்லைப் புறத்து உள்ள நல்லசெடி, எத்தனை நாள் இருந்தாலும் அத்தனைக்கும் பலன் அளிக்கும் செடி.

110. முள்ளு நிறைந்த மரத்தில் கொள்ளை கொள்ளை குண்டுப் பழங்கள், குன்று மணி நிறத்தில் கோடி இருக்கிறது; கொஞ்சம் புளிப்பானாலும் கொஞ்சிக் கொஞ்சிச் சுவைக்கிறார், கொட்டை பெரிதை எட்டித் துப்புறார் சிறுவர்.

111. தண்ணீரில் வாழ்க்கையைச் சந்தோஷமாய் நடத்தும், தரையிலும் வாழ்க்கை அதற்குச் சமமாய் நடத்தும், சக்தி யறிந்த ஜீவன் பெயரைச் சாற்றுத் தெரிந்தால் சல்தியாய் சொல்லுங்கள்.

112. அங்கு மிங்கும் அலைந்து தேடி, அகப்பட்ட புல், ஓலை, நாரை, அப்பனும் அம்மையும் அமைத்த கூட்டைப் போல, யாராலும் செய்ய முடியாது அதிசயம், அற்புதம் அறிவார் யாரே.

113. ஊசிபோல் ஒரு முள் எடுத்து, ஊன்றிக் குத்தினேன், ஒரு மரக்கிளையில், ஊற்றிலிருந்து ஒழுகும் நீர் போல் ஓடி வந்தது வெள்ளைப்பால்.

114. ஊர்முழுவதும் உறங்கிக் கிடக்க, ஒருவன் நடத்துகிறான் திருட்டுவேலை, ஒருவர் இருவர் விழித்து விட்டால் ஒளிந்து கொள்ளுகிறான் பொந்துக்குள்ளே.

115. அடுக்கடுக்காய் அநேகம் முடிச்சுகள் அடங்கிக் கிடக்குது ஒரு மரத்திலே, அதைப் பிடுங்கி வெட்டிக் குடித்தால் அருமையாய் இருக்கும் அதன் நீரெல்லாம், அப்பா! அதின் ருசி சொல்ல ஆயிரம் நாவும் போதாது.

116. கோலிக் குண்டு அளவில் கோடி பழங்களை ஒரு மரத்தில் பார்த்தேன், கொக்கு, குருவி, பறவை, வந்து கொத்தித் தின்றன அவற்றை.

117. பள்ளமும் வரியும் படிந்து கிடக்கும் உடல் எல்லாம், பள்ளத்துக்குள்ளே பார்க்கலாம் சொரசொரப்பு, பதார்த்தத்துக்குப் பக்குவமான காய் பார்த்திருப்பீர், பார்த்தால் நீங்கள் பகர்வீர் இதன்பேர்.

118. முத்து முத்தாய் மணிகள் முழுவதும் நிறைந்திருக்கும்; அத்தனையும் மூடி ஆடைத் துண்டுகள் அடை அடையாய் இருக்கும், அவித்து அல்லது சுட்டுத் தின்ன ஆசைப்படுவீர்.

119. கொடியிலே தொங்கும்காய், கொப்புளங்கள் உடலில் கொண்டகாய், கொண்டு வந்து கறி சமைத்தால் கொஞ்சம் கசப்பு கூடவே இருக்கும், கூடியிருந்து உண்ண குணமுண்டு, சுகமுண்டு, கூறுவாய், இதன்பெயர்.

120. வெள்ளை நிறத்திலே விளங்கும் ஓர் குண்டு, குண்டுக்குளே உண்டு வெள்ளை நிறக்கூழ், வெள்ளை நிறக் கூழுக்குள் நல்லதொரு மஞ்சள் பொருள், உள்ள ஒன்றை உரைக்கத் தெரிந்தவர், உண்மையில் வல்லவர் உயர் ஞானம் உள்ளவர்.

121. பார்வை உறுப்பைப் பாதுகாக்க, ஓரமாய் வளர்ந்திருக்குது கோரைப்புல், யாரும் தெரிவார், பாரும், புரிவீர்.

122. கடுகு அளவு பூச்சி, காது வெடிக்கக் கத்தும் பூச்சி, கள்ளத் தனமாய் வந்து உள்ள இரத்தம் உறுஞ்சுகிறது.

123. கொட்டு மேளம் இல்லாத இடத்தில், தட்டுச் சத்தம் சரமாரியாய்க் கேட்குது, சங்கதி தெரிந்தால் சரியாய்ச் சல்தியில் சொல்லுங்கள்.

124. திறக்கும் மூடும் அறைக்குள்ளே, தீவட்டித் தடியர் பலர் நிற்கின்றார், தென்பட்ட பொருளைத் தின்றிட விரைகிறார். தெரிந்தவர் சொல்லுவீர்.

125. குண்டு குண்டு கனிகள், கொஞ்சும் மஞ்சள் கனிகள், கோமானைக் கண்டுகொள்ள கொண்டு செல்லும் கனிகள்,

126. உடைக்கக் கடின ஓட்டை உடையது, உடைத்தால், ஒழுகும் நீரைக் கொண்டது, உள்ளே வெள்ளைப் பொருள் உள்ளது, ஊரெங்கும் பார்க்கலாம் உதவும் கறிக்கு.

127. ஊரார் கொல்லையில் உண்டாகும் செடி, ஒரு அணு இரு அணு விலைக்கு விற்கும் செடி, உவந்து உண்ணும் மக்களுக்கு உடலுக்கு உரம் என உரைப்போம் நாம்.

128. செக்கச் சிவேர் என இலை தோன்றி, பச்சைப் பசேர் என உருமாறி, மஞ்சள் மசேர் எனப் பழுப்பேறி பழுத்ததும் விழுந்தது அந்த மரத்தின் இலையே.

129. ஊசி முள்ளுக்காய், உருண்டை வடிவக்காய், ஒருவரும் தின்ன ஒவ்வாத காய், ஊரோரம் எல்லாம் உள்ள செடியில் உண்டு. இதனை நீ கண்டுகொள்.

130. செடியிலே செங்குத்தாய்க் காணும் காய், செம்மையாய் இருக்கத் தேர்வோம் கறிக்கு, செடியிலே முற்றினால் சீ எனத் தள்ளுவோம், சாற்றுவீர் இதன் பெயர்.

131. வெள்ளை வெளேர் நிறப்பெண், பெண்ணின் மேனி எல்லாம் கிள்ளு, கிள்ளுக்கெல்லாம் கொள்ளைச் சொல்லு. சொல்லுக்குச் செல்லும் சேரங் கைப்பொன்

132. மூடிக்கிடக்கிறது முத்தப்பன் கதவு, ஓடித் திறக்கும் உணவைக் கண்டதும், நாடி இதன் பெயரை நவிலுங்கள் பார்ப்போம்.

133. பந்துபோல உருண்டைப் பழங்கள், பச்சை நிறத்தில் பார்க்கும் பழங்கள், பணத்துக்கு ஒன்றாக விற்கும் பழங்கள், பழரசத்துக்காகப் பலபேர் வாங்கும் பழங்கள்.

134. ஏழைகளுக்கு உணவாய் உதவும் இலையாம், எங்கும் முளைத்து வளரும் இலையாம், எல்லாச் சத்தும் இருக்கும் இலையாம், சொல்லத் தெரிந்தால் நல்லவர் என்பேன்.

135. கறுப்பும் வெள்ளையும் கலந்து, கடுகுக்கும் பெரிதாகக் காட்டில் கிடைக்கும் விதை, தட்டாருக்கு இது கட்டாயம் தேவை விதை.

136. குண்டுச் சட்டி போலப் பழங்கள், குலை குலையாய் மரத்தில் தொங்கும் பழங்கள், கறுப்பு நிறத்தில் காணும் பழங்கள், குறித்துப் பெயரைக் கூறத் தெரிந்தால் கொடுப்போம் ஒரு கோப்பை காப்பி குடிக்க.

137. குட்டைவால் பிராணி, கூர் கொம்புப் பிராணி, கிட்டப் போய்த் தட்டிக் கொடுத்தால் முட்ட வருவது திட்டம் தெரிந்து கொள்.

138. பிள்ளை பிறந்ததும் பிரிந்திடும் என் உயிர், பிரிந்தாலும் இறந்தாலும் பேர் சொல்லப் பிறகும் பிள்ளைகள் எனக்கு இருக்கிகும்.

139. காலைக் கடமையைக் கட்டாயம் செய்யும், கண்ணும் கருத்தும் கவலையும் கொண்டது; கொண்டையைத் தலையில் உள்ளது உணர்வீர், இப்பறவையை எங்கும் காணலாம்.

140. தத்தித்தத்தி நடந்து செல்லும் குத்துவால் கோழி, அது தண்ணீரில் இறங்கி விட்டால் தாண்டவம் ஆடும்.

141. குத்தூசிக் கொப்பாக இருக்கும் மூக்கு, கொண்டை கூராக இருக்கும் தலைமேலே, துண்டம்போல வரைகள்

தோன்றும், உடலின் மேலே, உண்டு மகி ம் மண்புழுக் கண்டு.

142. நீல நிறத் துப்பட்டி, நீண்டு விரிந்த துப்பட்டி, நிலம் முழுவதும் மறைக்க நெய்த நல்ல துப்பட்டி, எங்கும் காணலாம்; ஏகன் நெய்த துப்பட்டி.

143. என்னையன்றி இருக்காது புளிரசம், எப்போதும் வெள்ளையாய் இருப்பது நிசம், எந்தக் கடையிலும் இல்லை என மாட்டார், என்பேர் தெரிந்தவர் இனும் பெறுவார் நிதம்.

144. புரை புரையாய்த் தோல் பொதிந்தே இருக்கும் முறை முறையாய் மக்கள் நறுக்குவோர் கறிக்கு, தரையில் வளர்ந்து விரைந்து உயர்வேன் நிறைய உலகில் விலைக்கு என்னை விரும்பி வாங்குவார்.

145. எல்லாரும் என்னால் மேலே ஏறுவார் இறங்குவார், என்னால் நானே இறங்க ஏற முடியாது, என் நிலைப் பாரத்தால் ஏளனம் செய்வீர், நான்யார்?

146. கரையேற வருபவர்களைக் கடத்தி நான் வைப்பேன், கரை ஏறிப் போக நான் காரணம் காணேன், கஷ்ட நிலை கண்டு இஷ்டமாய்ச் சிரிப்பீர், நான் யார்?

147. கதவண்டை நுழைந்தவுடனே காசு எடு என்று சொல்லி ஒருவன் கையை நீட்டுகிறான்.

148. சந்தோஷமாகத் தண்ணீரில் இருந்தேன், எண்ணியதெல்லாம் எனக்கு இருந்தது, மண்ணுக்கு வந்து மனம் மகிழப் பார்த்தேன், புண்ணாக நொந்தேன், போகுதே என் உயிர், புரியாமல் போனேன்.

149. கருநிறத்தில் காணும் அடிமரம், காணக்கிடையாது கிளைகள் ஏதும், கரிச்சட்டிகளை கவிழ்த்த காய்கள் காணலாம் இம்மரம் காடு மேடெல்லாம்.

150. காலையில் எழுவோம் நாங்கள், கத்திக்கத்தி அழைப்போம் நாங்கள், கண்டதை எல்லாம் தின்போம் நாங்கள், கருநிறத்திலே கண்டீர் நீங்கள், கதையைப் புரிந்தால் களிப்படையுங்கள்.

151. கூட்டம் கூட்டமாய்க் கூடியே வாழ்வோம், கொண்டதை உண்டு கொள்ளுவோம் மகிழ், கண்டவர் எம்பொருளைக் களவாடுகிறார், கலக்கம் கொண்டு கவலையால் மாழ்வோம் நாங்கள் யார்?

152. குண்டன் குட்டையன் குளிக்குள் கிடக்கிறான்,
கொண்டு வந்து போட்டதைக் கூழாக்கி விடுகிறான்

153. கவலையாய் என்னைக் கை ஆண்டால்; காண்பீர் நான்
பேருபகாரி. கவலையில்லாமல் கையாண்டால்,
காண்பீர் நான் பேரபகாரி.

154. கட்டிப் பொருளைக் கடித்துத் தின்று, பின்பு
களைப்புத் தீர்ந்ததும் கஞ்சி குடிப்பதுபோல,
காலை மாலை குடித்துத் திருவீர், களிப்பும் கொள்ளுவீச்
கதையைத் தெரிந்தால் கடிதில் சொல்லுங்கள்.

155. அரை முழக்குச்சி, அற்புதக் குச்சி,
அதற்குள் இருக்குது அழகான கோரைப் புல்,
கோரைப் புல்லால் கோரும் குறிப்புகள்
குறித்துக் கொள்ளலாம்; குதூகலம் கொள்ளலாம்

156. குண்டுச் சட்டி நிறையக் கூழ்போன்ற பொருள்,
கிடக்குது, கோடி கோடித் திட்டம் கொள்ளை
கொள்ளைப் பள்ளம் கூழினுள் காணலாம்,
கூறுவீர் இதன் பெயர் குறிப்பால் நீரே.

157. பூவாய் இருக்கையில் பொரியலுக்கு ஆகும்,
காயாய் இருக்கையில் கறிக்கு உதவும்,
கனியாய் இருக்கையில் களிப்புடன் தின்னலாம்,
கழனிக் காட்டில் காணலாம் இம்மரம்.

158. மரம் செடி கொடி மற்றும் பயிர் பச்சை,
உரம் பெறவே உண்டாக்கி உயர் நிலையில்,
கரம் குவித்த திறம் பெற்று திகழும், இதன்பேரைச்
சிரம் தாழ்த்தத் தெரிவிப்பீர், தெரிந்தால் நீரே.

159. உற்பத்தி உயர்விடத்தில், ஊறுவது தாழ்விடத்தில்,
உலகிற்கு உயிர் நிலையாய் உள்ளது:
இது உண்மை காண்பீர்,
ஓயாது இரைச்சலுடன் ஓடிவரும் கீழ்நோக்கி
உரைத்திடலாம் இதன் பெயரை உற்றுநோக்கில்.

160. தெய்வத்தின் திருக்குணமாய், பொய்க்குஎதிர் மறையாய்
போற்றும் குணமாய்ப் புவியில் புனிதமாய்ச் சாற்றும்
குணம், ஏற்றமிதை எடுத்துரைப்பீர் இசைய நீரே.

161. மொழிக்கெல்லாம் முதல் எழுத்தாய், முடிந்த தமிழ்
எழுத்துக்கு மெய் எழுத்தாய், அடியவர் தெய்வத்தின்
அருங்குணமாய், வடிவுக்கு கடை எழுத்துப் பூவாய்
வந்து, முடிமேல் சூடும், மூன்றெழுத்து மொழியை
முடிந்தால் நீர் விடுவித்திடுவீர் ?

162. அன்னங்கரேலென கரு நிறமானது, துன்னும் சிவப்பாய்
மின்னும் நிறமாய், உன்னால் உணரா ஒளிவிடும்.
சூடாய் எண்ண முடியாது இப்படியானது எப்படி
என்று, இயம்பிடு பார்ப்போம்?

163. ஒவ்வொருவருக்கும் தினம் உபயோகமானது.
ஒரு அணுவுக்கு ஊரெங்கும் வாங்கலாம், உபயோகிப்பதில்
அபாயம் வரும், அறிவில்லாவிடின். ஊரெல்லாம் நாசம்
உள்ளதெல்லாம் சாம்பல், உண்டாக்கும் இதனை
உரைக்கப் பாரும்?

164. கத்திக்கொண்டே காலையில் எழுவோம்.
கண்ட இடமெல்லாம் பறந்தோடிப் போவோம்.
களவாடித் தின்பதில் கை தேர்ந்தவர் நாங்கள்,
மாலை நேரம் மனைக்குச் செல்லும், எம்பேர் சொல்லும்?

165. பிறப்பு முதல் இறப்பு வரை எந்த நேரமும்
இயங்கிக் கொண்டிருக்கும் இயந்திரம், ஒரு நொடிப்
பொழுது ஓய்ந்து நின்றால், உடனே மரணம்.

166. உலகம் முழுவதற்கும் மிக உபகாரியானது.
அளவு கடந்து அதிகம் பெருகினால் அபகாரி ஆக,
அவ்வளவும் நாசம், அது செய்யும் மோசம்.

167. உருண்டும் திரண்டும் நீண்டும் வளைந்தும் பெரிதும்
சிறிதுமாய்ப் பேதங்கள் பலவாய்ப் பருவகாலத்தில்
பழுத்துத் தொங்கும் பழங்களைப் பார்த்தவர்
பறித்துத் தின்பார். பகர்வீர். அதன் ருசி பலபேர் அறிய.

168. பந்தைப் போலப் பார்க்கத் தோன்றும் பழம்,
முழுவதும் சதையாய் இருக்கும் பழம்
பார்த்தால் அதனைப் பறிக்கச் சொல்லும்,
பதமாய்த் தின்றால் பலே ருசி. பலே ருசி. என்பீர்.

169. எத்தொழிலிலும் உத்தம தொழிலென உலகம் போற்றும்.
நத்தும் தொழிலில் சித்தம் வைத்தவர்
நித்தம் க்ஷேமமும் நிம்மதியும் அடைவர்,
அச்சமே வேண்டாம், உச்சநிலைத் தொழில்.
உரைப்பீர் எதுவென?

170 பொன்னைப் போலப் போற்றும் பொருள்.
பூமிக்குள்ளே புகை நிறத்தில் புதைந்து கிடக்கிறது.
எடுத்துப் பார்த்தால் எவ்வளவோ பிரயோஜனம்.

171. பூமியில் படர்ந்து பரந்த இடத்தில், பூசணிப் பழத்தைப்
போன்ற உருவில், பொந்தாக உள்ளே இருக்கும்
அந்தப் பழம், சந்தையில் விற்கும், சகலரும் வாங்கலாம்
சிந்தைக்குப் பெயர் வந்தால் தெரிய சொல்வீர்.

172. கெட்டியாய் ஓடு கட்டியிருக்கும்,
கெட்டித் தயிர்போல் தசை உள்ளே இருக்கும்,
கொட்டி உடைத்துத் தசையை உண்போம்,
அட்டியின்றிச் சொல்லும் அறிந்தால் அதன் பெயர்.

173. ஆண்டவன் படைத்த அற்புதக் குன்றின்மேல்,
ஆச்சரியமாய்க் கோரைப்புல் அடர்த்தியாய், முளைக்குது.
அரிய கரு நிறம். அநேகம் நாள் சென்றால்
அத்தனையும் வெள்ளையாய் ஆவது விந்தை.

174. உலக விவகாரம், ஊரார் தொல்லை, எல்லாம் அறிய
நல்ல மடல்கள், காலை மாலை கடுதாசி காட்டும்,
வேலை இல்லாதவர் விரும்பிப் படிப்பார்,
நூலைப் படிப்பதிலும் நுகர்வர் இன்பம்.

175. வெண்ணிறமாக விளங்கிடும் பொருளில்,
விரவி இருக்குது இளகும் கட்டியும், எண்ணெயும்
உண்ண, ஊரில் எங்கும் உண்டு, நீர் வாங்கலாம்,
உள்ளது சொன்னேன், உறுதியாய் நம்புவீர்.

176. கடுகு விதையைக் காட்டிலும் சின்னது,
காட்டிலும் முளைத்து காடு எல்லாம் பரவினது,
கால் நடையாய்க் களைத்தவர் இளைத்தவர்,
களித்து நிழலிலிருந்து சென்றனர்,
கண்ட இம்மரத்தின் பெயரை விண்டுடுவீரே.

177. நெட்டையாய் வளர்ந்து, செட்டைபோல
செழுங்கிளை விரிந்து, பட்டை பட்டையாய்ப்
பார்க்கலாம் நெடுக, பட்டாளி ஒருவன் படுக்கநிழலற்ற,
காட்டு மரம் பெயர் கேட்டால் நகைப்பீர்.

178. விரலுக்கு நிகராய், சிறு சிறு குழாய்கள்,
அருவி நீர் போல் அமிர்தம் சொரியுது,
அருந்தி மக்கள், பொருந்துவார் மகிழ்ச்சி.

179. ஓடத் தொடங்கின நாள் தொட்டு,
ஒரு நிமிஷமும் ஓயாமல் ஓடுது,
ஒரு நிமிஷம் நின்றால் மறு நிமிஷம் ஓடாது,
ஒருவரும் அதனை ஓடப் பண்ணவும் முடியாது.

180. நீண்டு உருண்ட சிறு குழல்,
வேண்டும் எண்ணம் வெளியிட,
வெவ்வேறு நிறத்தில் நீரை உகுக்கும்,
விவரம் தெரிந்தவர் விளம்புவீர், இதன் பெயர்.

181. காடு முழுவதும் வெள்ளை நிறம்,
காணுவதெல்லாம் கரும்வட்டம், பொட்டு
கருத்தைக் காட்டும் அருமையான பொருளை,
ஆரும் விரும்புவார், அறிந்தவர் இதனை அறியக் கூறுவீர்.

182. சூரியன் சந்திரன் தூரத்தில் இல்லை,
அடுத்தடுத்திருப்பது ஆச்சரியமில்லை,
அறிந்தவர் சிரித்தால் அதிசயமில்லை.

183. வாரம் ஒரு முறை போனது வந்தது, வந்தது மறுபடியும்
போகத் தெரிந்தது, வழக்கமாக மாறி வருவதும்,
போவதும், ஒழுக்க முறையில் ஒரு நாளும் தவறாது.

184. கட்டை ஒன்றைக் கையில் எடுத்து, கல்லில் பலமாய்
உரைத்தேன். கமகமவென்று கமழ்ந்தது வாசனை,
காட்டில் வளரும் மரத்தில் கடவுள்,
ஊட்டும் வாசனை உவக்க வைத்தனன்,
நாட்டவர் நாம் நன்றி செலுத்துவோம்.

185. பூமிக்கு மேலே பூவும் கொடியும்,
பொருந்தும் இலையும் இருந்திடக் காண்பீர்,
பூமிக்குள் காய்கள் பொதிந்து கிடக்கும்,
புதுமைச் செடிக்குப் புகல்வீர் பெயரே.

186. எண்ணெய் தண்ணீர், இரண்டும் கலந்து
எரியும், அடுப்பில் பொரிய வைத்து,
எண்ணும் பண்டம் உடனே கொட்டி, பண்ணிய பொருள்
வெண்ணெய் போல் இருக்கும்,
தின்ன வெகு ருசி. தெரிந்தால் சொல்லுவீர்.

187. நீராவி கொண்டு நிறம் வெள்ளையாக,
நித்தம் நம் வீட்டில் சித்தம் செய்வோம்,
பத்திய பண்டம் பலரும் பகர்வார்,
உத்தியாக உரைப்பீர் நத்தி இதன் பெய.

188. மண்ணுக்குள்ளே மறைந்து கிடந்தது, மங்கையர் உடலில்
மங்கா ஒளியாய், மகிமையாய் விளங்குது.

189. திரித்த கயிற்றைச் சுற்றிய தோற்றம்,
பொதிந்து எண்ணெயில் விரித்துப் போடுவார்,
சிரித்த முகத்தோடு சிறுவர் உண்பர்.

190. சிறுத்திருந்த சிறுவிதை நெருப்பில் பெருத்து,
வெள்ளையானது, கருத்துடன் தெரிந்தால்
உருத்துடன் உரைப்பீர்.

191. வட்ட வட்டமாய் இருப்பதைப் பிட்டு, சட்டினி தொட்டு
வாயில் போட்டேன். வசமாயிருக்குது தின்ன.

192. தின்னக் கசக்கும் பழங்களில், தேர்ந்தெடுத்த மூத்து
திராவகம், எண்ணெய் கசியச் செக்கிலிட்டு ஆட்டுவர்,
திவ்யமான எண்ணெய், தேவைப்படும் மருந்துக்கு.

193. எங்கள் இனத்தார் எவருமே கறுப்பு,
எங்கள் உடலில் உரோமம் அதிகம், தங்கியிருப்போம்
தனிப் பெருங் காட்டில், தனித்து நீர் வரின்
தாவிப் பிடிப்போம், தீனியாக தின்றே தீர்ப்போம்,
நாங்கள் யார்?

194. குட்டி பல போட்டுக் கூட்டமாய் அலைவோம்,
அட்டி இல்லை அதிகம் பெறுவோம்,
சட்டி சட்டியாய் இட்டது தின்போம், சகதியும் சேறும்
எங்கள் தயிரும் சோறும். சங்கதி விளங்கினால்
சாற்றுவீர் எம் பெயர்.

195. வீட்டின் கூரையில் கூட்டைக் கட்டி,
விதவிதமாகச் செயல் பல ஆற்றி? விரைந்து பறந்து
இரையைத் தேடும், விந்தைக் குருவி, சிந்தை மகிழும்

196. புதுமையான புதர்களிலே பொன்போல்
பழங்கள் பழுத்தன, புவியின் மக்கள் பறித்து
வந்து, விதையை மட்டும் எடுத்து வறுத்துத்
தூள் பண்ணி விரும்பும் பானம் பண்ணுகிறார்.

197. உயரமான மலைகளில் உண்டாகும் ஒரு செடி.
உச்சிக் கிளையிலே உள்ள நல்ல கொழுந்தைக் கிள்ளி
நல்ல பானம் செய்கிறார், நமக்குக் குடிக்க உதவுது.

198. பந்து உருவம் படைத்த பழங்கள், தொங்குவதை
நான் பார்த்தேன், ஐந்து ஆறு பழங்கள் பறித்து
அதன்மேல் தோலைப் போக்கினேன், மங்கல் சிவப்பு
சுளைகள் கண்டு மனதில் மகிழ்ச்சி கொண்டனன்
அங்கம் குளிரத் தின்று அடைந்தனன் மா ஆனந்தம்.

199. ஆற்றின் ஓரமாகப் போக அருமை வாசம் வந்தது
ஆச்சரியப்பட்டு நானும் அதனைக் கிட்டிப் பார்க்கவே,
அகன்று நீண்ட இலைகள் பலவும் முட்களோடு இருந்தன.

அதனுள்ளிருந்த பூவிலிருந்து அந்த வாசம் வந்தது.

200. கவிந்த குடைபோலக் காணுது ஒரு மரம்,
சிவந்த செவ்வானம் போல் தோன்றுது அதன் மலர்
மிகுந்த பச்சை இலைகள் மூடி, அம்மலர்
காட்சி ஆனந்தம் தந்திடும்.

201. பூமியில் தோன்றிய மரங்களுள் அரசு,
பூக்கள் எல்லாம் மஞ்சள் நிறச் சிரசு
போற்றும் இலைகள் சோறுண்ண ஆகும்,
புரிந்து கொண்டவர், புகல்வீர் இதன்பெயர்.

202. குத்தீட்டி போல் கூர் நுனி இலைகள்,
கொத்துக் கொத்தாய் குலை குலைப் பழங்கள்,
மெத்த ருசி தரு மிதை மெச்சியே தின்போம்,
சத்தமில்லாமல் சாற்றுவீர் இதன் பெயர்.

203. தண்ணீர் போன்ற எண்ணெயை ஏற்கும்
தடதடவென்று சத்தத்தைப் போடும்
தட்டுத்தடையின்றித் தரையிலே ஓடும்.
தனவந்தர் வீட்டில் தடையின்றிப் பார்ப்பீர்.

204. காலுக்கும் நீளக் கனத்த வாலுண்டு,
கழைக் கூத்தர் போலக் கரணங்கள் போடும்,
காசு பணத்தைக் கரணத்தால் வாங்கும்
கந்தைத் துணி மனிதர் கையில் காணலாம்,
கருதும் இம்மிருகம் கண்டவர் சொல்வீர்

205. வாள்போல் இலைகள் வளைந்த கிளைகள்,
வளம் பெறும் காய்கள், வண்ணப் பழங்கள்,
வாசனை வீசி வாங்கச் செய்யும்,
வயல் நிலங்களில் வளரக் காண்பீர்
வழங்கும் பெயரை வழுத்துவீர் அறிந்தால்.

206. வெள்ளை வெளேர் என, விளங்கும் மலர்கள்,
கொள்ளை கொள்ளையாய் கொடிகளில் குவிந்து,
குலவும் வாசனை மலர் குண்டுபோல் தோன்றும்.
கொல்லைப்புறத்தில் யாரும் கொள்ள வளரும்,
சொல்லத் தெரிந்தால் செப்பும் இதன் பெயர்.

207. நல்ல நல்ல கனிகளைப் பல்லால் கடித்து,
நாசம் விளைக்கும் நாற்கால் பிராணி,
நம்மவர் அதனைப் பிள்ளை என்று அழைப்போம்,
நாளும் காண்போம், வாழும் மரங்களில்.

208. கட்டுச் சோற்று மூட்டைபோல் காணும் உருப்படி,
கால்களுக்கு இடையில் கட்டாயம் காண்போம்,
கையினாலே கசக்கி இழுக்கக்
கசியுது கலம் வெள்ளைநீர் பானம்.

209. காட்டிலே மேயும் காளையும் மாடும்,
கால்களைச் சுற்றிக் கழுத்தை நீட்டிக்
கள்ளமில்லா வெள்ளைப் பறவை திரியும்.
கண்டீரானால் களிக்கப் பேர் சொல்லும்.

210. கோடி கோடி மக்கள் கூடிக் கும்பலாய்
ஆடி ஆடிச் செல்லும் அசையும் அரணை
நாடித் தேடி நாட்டவர் இழுக்கிறார்,
நல்ல விதமாய் நவிலுவீர் இதன் பெயர்.

211. ஊசி இலைகளுடன் உயர்ந்து நிற்கும்,
நாசியில் முகர நன் மலர் இல்லை,
நாவில் ருசிக்க நாம் பாரோம் பழங்கள்,
நாட்டின் மக்கள் காட்டில் வளர்ப்பர்,
நாளும் விறகாய் நமக்கு உதவும்,
தன் மரப் பெயரை நவிலவும் நாவால்.

212. கொள்ளை கொள்ளை வெள்ளை இலைகள்
கூட்டி ஒன்றாய்த் தைத்த ஒன்றை,
மெள்ள மெள்ளத் தள்ளிப் பார்த்தால்
மேனி எல்லாம் புள்ளிகள் உண்டு,
புள்ளிகளை எல்லாம் புரிந்து கொண்டால்
புதுமை பலபல புலப்படும் பாரீர்.

213. தரையைத் தொட்டு உராயும் வால் மிருகம், ([illegible])
தலைவன் சொல்லைத் தட்டாமல் செய்யும்,
தலையைத் தாழ்த்தித் தரையிலே புரளும்,
தந்த பொருளைத் தாவி வாங்கும்,
அந்த மிருகம் அறிந்தவர் சொல்லுவீர்.

214. வட்ட வட்டமாய் செய்த தட்டு,
வாணல் எண்ணெயில் பொரித்தட்டு,
வாகாய் உணவோடு உண்ணும் தட்டு,
வாயில் போட்டு மென்று தின்றேன்,
வசமாய் இருந்தது: இசைவு ருசியாய்.

215. ஆற்றங்கரையில் ஓர் அதிசயம் கண்டேன்,
ஆணும் பெண்ணும் அழகிய குட்டிகள்,
வேணும் படியாய் மேய்ந்தன புல்லை,
ஆணுக்குக் கொம்புகள் அழகாய் விளங்கின,

பெண்ணுக்குக் கொம்பு பேசக் கிடையா,
அற்புதம் நீர் அறிந்தால் மகிழ்வீர்.

216. சுடச்சுட இருக்கும் சோறும் சாறும்
சூடாக இருக்கும் கூழும் குழம்பும் சுருக்காய் முகந்து
சுருக்காய் உமக்குச் சுகமாய் உண்ணச் சேவை
செய்யும் சேவகன் என்னைத் தெரிந்தால் சொல்லுங்கள்.

217. வெள்ளை நிறமான மேடைக்கு
நல்ல இரு கருமணி பதித்திருக்கும். மெள்ளத் திறக்க மூட
விநோதக் கதவுகள் இரண்டு உண்டு.

218. அரைக்கும் ஆலைக்குள் அகப்பட்டுக் கிடந்தாலும்;
அணுவளவு சேதமும் என்னை அணுகாமல் இருக்கிறேன்

219. நீட்டக் குறுக்க, ஆட்ட அசைக்க, ஆன சிறு கட்டத்தில்
ஐந்து சிறுமுளைகள் அடித்திருப்பது அற்புதம்.

220. மொட்டைப் பாறை மேலே முளைத்த கரும்பயிர்கள்,
வெட்ட வெட்டத் தழையும். வேடிக்கை விநோதம்.
வெகு காலமானதும் வெள்ளையாவதும் விந்தை.

221. சின்னம் சிறு கோட்டை, சிங்காரக் கோட்டை,
செல்ல நல்ல வழியுண்டு. திரும்பி வர வழியில்லை.

222. ஓடிப் படர்ந்த கொடி அடியிலே
நாடும் வேர்கள் கூடும் இடையிலே
நல்ல கொழுக்கட்டை கிள்ளி எடுக்கக் கிடக்குது.

223. குடுக்கை போன்ற குளத்திலே,
கொடி ஒன்று வளர்ந்து தோன்றுது,
கொடியினுடைய நுனியிலே கொழுந்து எழுந்து
கண் கூசும்படி காணுது.

224. உயிர் பெற்று ஜீவன் உண்டான நாள்முதல்
அயர்வில்லாமல் ஒன்று காற்றை உள்ளே இழுக்குது
வெளியே தள்ளுது. ஒன்றுக்குப்பெயர் உனக்குத் தெரியுமா?

225. ஏக காலத்தில் எம்பிரான் படைத்த இரு சிறு கதவுகள்;
மூடும் திறக்கும்; மூளையில் யோசித்துப் பதில்
மொழிந்திடப்பார்?

226. நாலுகால் பிராணி, நடமாடும் பிராணி,
நாறும் பொருளானாலும் நல்ல தீனியாகும்.
சேறும் அதற்குச் சிறந்த இடமாகும்.
கூறுவீர் இதன் பெயர் குறிப்பால் அறிந்து.

227. இலையும் தழையும் இன்பமாய்த் தின்னும்,
எங்கு பச்சை இருந்தாலும் எட்டிக் கடிக்கும்,
தங்கு தடையின்றி தண்ணீரைக்குடிக்கும்,
அங்குமிங்கும் அடிக்கடி தாவும்.
இந்த மிருகம் இதுவெனக் கூறுவீர்.

228. கும்பல் கும்பலாய்க் கூடியே மேயும்.
கோரைப் புல்லைக் கண்டால் கூட்டமாய் ஓடும்.
கோணி நிற முடி மேலெல்லாம் இருக்கும்.
சேணியன் இதன் முடியால் சிறந்த கம்பளம் செய்வான்.

229. சேறும் சகதியும் சேர்ந்த குட்டையில்
சென்று தினமும் நன்றாகப் புரளும்
என்றும் இதன் நிறம் கருமையே யாகும்.
இன்று இம்மிருகம் எங்கும் இருக்கும்.

230. புல்லும், வைக்கோலும் புளித்த கழிநீரும்
போதிய அளவுக்குப் பொறுக்க ஏற்றுப்,
போற்றும் அமிர்தம் பொழிந்து தந்திடும்.
பொறுமைக் கிடமாகப் புகலும் மிருகம்
பொட்டெனத் தெரிந்தால் சட்டென்று சொல்லு.

231. ஏரிக் கரையிலும் எவ்விடத்திலும் இருக்கும்,
இரைதனை இனிதாய் மேய்ந்து, குறையேதுமே கூறாமல்
பொறுமையாய் விரைவில் எஜமான் வைக்கும்
பொதியை வெகு நன்றியுடனே வீட்டில் சேர்க்கும்,
வெட்ட வெளியிலும் குட்டிச் சுவரிடையிலும்
திட்டமாய்க் காண்பீர்: தெரிவீர் இம்மிருகம்.

232. ஆகாயத்தில் பறந்து அங்குமிங்கும் அசைந்தாடும்.
ஆனந்தம் கொள்வார் அகம் மிக மகிழ்வார்: சிறுவர்.

233. வீட்டிலும் வசிக்கும் காட்டிலும் திரியும்,
ஓட்டமாய் ஓடிப்போய் வேட்டையாடும்,
வீட்டுப்புலி என்று நாட்டவர் கூறுவர்,
நட்டமே நமக்கு நாளும் செய்திடும்,
பட்டப் பகலிலே படுத்து உறங்கும்
சாற்றும் இதன் பெயரினை; சந்தோஷம் அடைவேன்.

234. மூலை முடுக்கிலே முழுநாளும் தங்கி
மாலை நேரம் வந்திடும் வெளியில்
காலை எடுத்துக் கடுக ஓடிப்போய்
வேலைத் திருட்டை வெகுவாய் நடத்தி
வேணும் இரையை விரும்பித் திருடி
வேறு வேறு செயலை வேண்டிய விதமாய்

விரைந்து செய்யும் விநோதம் பார்த்து
விந்தை ஜீவனின் பெயர் விளம்பிடுவீரே ?

235. என்றும் நன்றிக்கு எடுத்துக் காட்டாக
நன்று விளங்கும் நல்லதோர் மிருகம்.
குன்றுது எஜமான் குறித்தவேலையை. குறைவறமுடிக்கும்
குணமுள்ள ஜீவன், கன்றுக் கொப்பதாய்ச்சென்று சிறுவர்
ஒன்றுய்க் கூடி ஓடி விளையாடுவர்,
ஒப்பில்லா மிருகம். ஓதுவீர் இதன் பெயர்.

236. கொம்பில்லா மிருகம் கோருவர் மக்கள்,
கொள்ளும் புல்லும் கொடுக்கத் தின்னும்,
கொடி பிடித்தேகும் கொடிய போருக்குக்,
குறிக்கும் பணிகளைக் குறைவின்றிச் செய்யும்,
கோமக்கள் ஏறிக் கொண்டாடும் மிருகம்,
கொஞ்சம் அஞ்சாது கூறுங்கள். இதன் பெயர்.

237. பல்லிலுலே பல பழங்கள் தானியம்,
பற்றிக் கால்களில் பகடி செய்வார்போல் பரபரப்பாகப்
பார்ப்போர் வியக்கப் பணிவுடன் தின்னும்,
பண்புள்ள ஜீவனைப் பார்க்கலாம் எங்கும்,
பகர்வீர் இதன்பெயர்.

238. குறும்பைக் காட்டக் குறித்திடும் மிருகம்,
கோலை எடுக்கக் குதித்து ஓடும்,
கோமாளிக் கூத்து கொள்ளையாய்ச் செய்யும்,
கொம்புக்குக் கொம்பு கூசாமல் தாவும்.
கோபப்படுத்திலுல் குறும்பைக் காட்டும்,
கோரணி செய்யக் குறவர் பழக்குவார்,
கொள்ளுவார் காசு, கொண்டாட்டம் அடைவார்.
கொடுத்த குறிப்பிலுல், கூறுவீர் இதன்பெயர்.

239. நெட்டுக் குத்தலாய் நீண்ட காதுகள்,
பட்டுப் போலப் பளபளப்பான உடல்,
குட்டையான முன்கால், நெட்டையான பின்கால்,
ஓட்டமாய் ஓட அவை வாட்டமானவை,
தேட்டம் போடத் தேடிப் போலுலும்,
தெரியாத தூரம் துரிதமாய் ஓடும்.
தெரிந்தவர் இதன் பெயர் செப்புவீர் சீக்கிரம்.

240. சாம்பல் நிற ரோமம், சரியாய் நீண்ட முகம்,
பாம்புக்குப் பகைஞன் பார்த்ததும் பாய்ந்திடும்,
நந்தம் பிள்ளை என சொந்தமாய் வளர்ப்போம்,

எங்கே போனாலும் தங்காது பின்வரும்
இங்கு இதன்பெயர், இயம்பிடும் பார்ப்போம்.

241. ஊர் ஓரமாக உயர் மரக்காட்டில் உல்லாசமாக,
உலாவித் திரிந்து, உபாயம் தந்திரம் ஒழுங்காய்க் கற்று,
ஊரின் மக்கள் உறங்கிடும் வேளை, உளவு பார்க்கிற
ஓர் திருடனைப் போல, ஊருக்குள் நுழைந்து
ஒரு பெரும் கோழியை, உரமாய்ப் பிடித்து
உடனே ஓடிப்போய், உற்றாரை எல்லாம்
ஊளையிட்டு அழைத்து.
உணவுக்குக் கோழியை உண்டு களிக்கும்,
உங்களுக்குத் தெரியும். உரைப்பீர் இந்த, உபாய மிருகம்

242. பகலெல்லாம் குகையில் படுத்துக் கிடக்கும்,
பகல் கழிந்ததும், அகலும் குகையை.
பல சிறு காட்டு மிருகம் பார்த்துப் பாய்ந்து பிடித்துப்
பற்களால் கடித்து; பல துண்டாக்கிப் பட்சித்து விட்டு,
பசியாறிவிட்டுப் பருகிடும் தண்ணீர், பயப்பட உறுமும்
பல வரி மிருகம் பார்த்திருப்பீர். பகர்வீர் இதன் பெயர்.

243. உடல் எல்லாம் உரோமம், கருநிறமாக
சடை முடிபோல உடையாய் இருக்கும்,
உட்காரும், தாவும், உயர எழும்பும்,
உண்ணும் உணவு மண்புற்று ஈக்கள்:
ஊசிக்கு ஒத்த கூரிய நகங்கள் உண்டு,
இதனைக் கண்டால் அஞ்சுவோம்.
இம்மிருகம், பெயருரைத்தால் கற்கண்டு தருவோம்.

244. பகல் எல்லாம் நாங்கள் அலைவோம்,
பறந்து வந்ததைப் பார்த்தால் பிடிப்போம்,
பட்சித்து வாழ்வோம், பசியை ஆற்றுவோம்,
பாறை உச்சியில் பல நாள் வாழ்வோம்,
பசுமரக் கிளையும் படுக்கைக்கு இடமாம்,
யாரும் பாராதிருக்கப் பார்த்துக் கொள்வோம்,
பறவைக்கு எல்லாம் அரசு நாங்கள்,
பார்த்தவர் பகர்வீர் எம்பெயர்.

245. ஆணில் அழகன் ஆச்சரியப்படுவீர்,
அண்டையில் வந்து ஆசையாய் என்னை
அருமை மனைவி பெருமையாய்ப் பார்ப்பாள்,
அருணன் தோன்றுமுன் ஆரவாரிப்பேன்.

246. கன்னங் கறேலெனக் காட்டில் கரும்பயிர் வளரும்,
சின்னஞ்சிறிய கரும் பூச்சி மேய்ந்து திரியும்,
இன்னதெனத் தெரிந்தால் இப்போது கூறுவீர்.

247. ஆரும் பார்க்க அழகு கொண்டை அமையத் தலையில்,
அலைவேன் வீட்டில், அன்பு எனக்கு அதிகம் காட்டுவீர்.
அறிவீர் என்பெயர், அதனால் சொல்லேன்.

248. கண்டதும் கடியதும் உண்டு வாழும்.
காலை தொடங்கி மாலை வரைக்கும், கத்திக் கதறி
காத தூரம் பறக்கும். கன்னங்கரிய பொன்னிறமுண்டு.
உன்னாலும் என்னாலும் உணராத் தந்திரம்
உள்ள இப் பறவையை ஊரெங்கும் பார்க்கலாம்,
உண்மையாய் இது ஒரு சின்னப் பறவை
உரைப்பீர் இதன் பெயர்: உவக்கப் பார்ப்பீர்?

249. ஆடி அசைந்து அலைத்து நடக்கும்,
அகன்ற அலகு அமையப் பெற்றது,
ஆழ நீரில் அடிக்கடி மூழ்கும்
அழகு முட்டையை அதிகம் இட்டும்,
அவயம் காக்க அறியாப் பறவை,
அங்காடியில் அவசியமிருக்கும்,
அறிந்தால் அதன்பேர் அறையுங்கள் பார்க்கலாம்.

250. பட்டை பட்டை வரைகள் சட்டையாய் விளங்கும்,
நெட்டை அலகு அதற்கு நீளமாயிருக்கும்,
பட்டை உடைய மரத்தைப் பார்த்துப் பொட்டுப்
பொட்டென்று பொழுதெல்லாம் கொத்தி,
அட்டை புழுக்களை ஆவலாய்த் தின்னும்,
அழகு கூர்மையாய் அமைந்த கொண்டை
அதன் தலையிலிருக்கும் அற்புதப் பட்சி,
அவ்வப்போது அங்குமிங்கும் பறக்கும்
ஆகாயத்தில்; ஆச்சரியப் படுவீர்.

251. காடு கரைகளில் களிப்புடன் வாழும்,
கூடு கட்டிக் குஞ்சு பொரிக்கவும் கூட்டமாய் இருக்கவும்
கொஞ்சமும் தெரியா.
நாடும் வெள்ளை நல்ல சிறு பொட்டுகள்
உடல் எங்கும் உண்டு, உற்றுப்பாருங்கள்,
உண்மையில் கறுப்பு ஒரு அடி நீளம் வால்.
உரத்த குரலில் நாம் உவந்திடப் பாடும்.
உயர் மாமரத்தினை உரிமையாய்க் கொள்ளும்,

உரைத்த குறிப்பினால் உரைப்பீர் இதன் பெயர்.

252. மின்னும் பளிங்கு போல் மேனி இருக்கும்.
மேக நிறத்தில் வெகுவாய் விளங்கும்.
பொன்னுக் கொப்பாய்ப் பொருந்தும் மேனியில்,
பொட்டுப் போல் வட்டங்கள் வாலிலிருக்கும்,
வாலை விரித்து வளைந்து வளைந்து ஆடும்,
வண்ணப் பறவையை எண்ணப் போனால்,
திண்ணமாய் இது தெய்வப் பறவை
தெரிந்தவர் இதன் பெயர் செப்புவீர் நீரே.

253. சந்து பொந்திலும் தாழ்வாரத்திலும்
கந்தையைப் பொதிந்து சொந்தமாய்க் கூட்டை
விந்தையாய்ச் செய்து விரும்பியே வாழும்
அந்த நற்பறவை அளவும் ஒரு சிறு முட்டைதான்;
முந்தக் கூறுவோர் எந்தம் நண்பரே.

254. எங்களுக்கு நீங்கள் இட்ட பெயர் ஒன்று.
என்றாலும் எங்களில் இருக்கிறோம் பலபேர்,
எழில் நிறக் கறுப்பு இசைந்த சாம்பல், ஏற்றும் பச்சை,
இனிய வெள்ளை, இப்படிப் பல நிறத்தில்
இருக்கிறோம் பார்ப்பீர்,
வாலை விரித்து வளைந்து நடப்போம்,
வானவெளியில் வட்டமிடத் தெரியும்,
வகை வகைக் கரணங்கள் வாகாய்ப் போடுவோம்,
வளர்ந்த கோபுரம் நுழைந்து குடியிருப்போம்,
வளமுள்ள எங்களை வாழ்த்துவீர். வழங்குவீர் எம்பெயர்

255. பச்சைப் பசேர் நிறத்தில், பார்க்கலாம் ஒரு பறவையை,
மெச்சத் தக்க வார்த்தை நிச்சயம் கற்றிடும்,
இச்சைப்பட்டு மக்கள் இல்லத்தில் வளர்ப்பர்,
மிச்சமாய் அது நச்சும் நற்பண்டம், நல்குவோம்,?
அச்சமின்றி அழைப்போம் பிள்ளை என,
அதன் பெயர் அறிந்தால் அறியக் கூறுவீர்.

256. ஓட்டத்தில் கெலிக்க ஒரு மிருகம் இல்லை,
கூட்டமாய்க் காட்டில் கூடியே மேய்வோம்,
கொம்புகள் எமக்குக் கிளைபோல் காணும்.
கோணமானால் கொம்பானாலும் கூர்மை உண்டு,
கொலைகார வேடரைக் கொஞ்சம் பார்த்தால்

தொலேதூரம் ஓடி ஒதுங்குமிடத்தில் ஒளிவோம்,
மலேயோரம் எங்கள் மாளிகை வாசம்,
மங்கையர் எங்கள்மேல் மா அன்பு கொள்வார்,
மண்ணில் எங்கள் பேர் மகிழ்வுடன் கூறுவீர்.

257. உணரும் உறுப்பை உயரத் தூக்கி,
ஓட்டு மூட்டையை முதுகு மேல் ஏற்றி
ஊர்ந்து செல்லுகிறது., உயிர் உள்ள ஜீவன்.

258. முள்ளுக் காடுமல்ல, கல்லுக்காடுமல்ல, முதியவரைக்
கண்டால் மதிக்கப்போடும் காடு. என்ன காடு?

259. நேரமெல்லாம் நீரில் நிற்கும், ஒரு சொட்டு நீரும்
தங்காது : ஒரு சிறிதும் நனேயாது.

260. தடி தடிக் கோல்கள் சந்தைக்கு வந்தன,
சந்தடியின்றி சகலரும் வாங்கிச்
சாப்பிடத் தொடங்கினர்.

261. குண்டு குண்டுக்கனிகள், கொய்யாப்பழம்போல் கனிகள்,
கண்டு கொள்ளப் பெரியவர்க்குக்,
கொண்டு செல்லும் கனிகள்.

262. நார் நிறைந்த மூடி போட்டு, நல்ல ஓடு இருந்தது.
ஓட்டை உடைக்க உள்ளிருந்து ஒழுகினது
ஓர் செம்பு தண்ணீர், ஓட்டுக்கு உள் புறத்தில்
வெள்ளேப் பொருளிருந்தது. வெகுவாய்ப் பயன்பட்டது.

263. ஓடு உடைந்தது, உள்ளிருக்கும் ஒரு உயிர் ஜீவன்
உருண்டையாய் பிறந்தது, பிறந்தது, உடனே திரிந்தது

264. நீரில் நீந்தித் திரிந்தது, நீளக் கயிற்றைக் கண்டது.
கயிற்றிலிருந்த பண்டம் கண்டுதின்றுவிடப் பார்க்கையில்
தொண்டையிலே மாட்டிக் கொள்ளத்
துள்ளித் துள்ளித் துடித்து மாண்டது.

265. விபூதி பூச விரிந்திருக்கும் இடம்,
விளக்கமாய் நாமம் விளங்கும் இடம்,
விவரம் தெரிந்தவர் விளங்கச் சொல்லுவீர்.

266. சட்டி காயச் சடசடவென்றது. சரக்கைக்
கொட்டவே சத்தம் கேட்டது,
போட்டது அத்தனேயும் பொரிந்து போயின,
பூ மலர்ந்தது போல பொரிந்தது தெரிந்தது.
போட்டேன் வாயில், பொங்கினது உவகை.

267. சருகு சேலைக்காரி, மெருகு மேனிக்காரி,
ஊருக்கு அருகே, தெருவுக்கு வந்தாள்,
ஊரார் பணந் தந்து வாரிக்கொண்டு போனார்கள்.

268. மொட்டைப் பாறையில் முளைத்த பயிர்கள்,
முதலில் முழுவதும் கறுப்பாய்க் கண்டேன்,
முதிர முதிர வெள்ளையாய் வெளிறின,
முற்றிலும் உண்மை முதியோர் அறிவர்.

269. குளவிக் கல் போலும், குடம் போலும்,
குழம்புச் சட்டி போலும், கொண்ட உருவக்காய்,
ஒரு ஜாதிக்காய், ஓடு முற்றி விட்டால், உதவாது கறிக்கு,
உமக்குத் தெரிந்தால் உடனே உரைப்பீர்.

270. சின்னச் சின்னச் செம்பு: சிமிழ் போன்ற செம்பு!
சின்னவரும் பெரியவரும் தின்ன நல்ல செம்பு,
செடிபோன்ற மரங்களிலே செழித்துவளர்ந்து தொங்கும்.
சிவப்பு நிறத்திலே தெரியும் இந்தச் செம்பு.

271. ஒரு முழ நீள உருளை-உள்ளே, அவ்வளவும் பொந்து
இரு புறம் மூடி, மூடியைத் தட்டினால்
கூடிடும் இனிய ஓசை: கானத்திற்கேற்றது,
காது கேட்டுக் களிக்க உகுந்தது.

272. பொன்னிறக் கனி; புவியோர் போற்றும் கனி;
கண்ணியமானவரைக் காண வேண்டும் கனி,
எண்ணி உண்ணும் உணவுக்கு உகந்த கனி
கன்னியப்பன் கழனியில் காய்க்கும் கனி.

273. ஆஸ்திக்காரருக்கு ஆன வாகனம்,
ஆகாயவெளி தான் அது செல்லுமிடம்.
ஆழியைக் கடக்க அரை மணி பிடிக்கும்,
அற்புத வாகனம் அறிந்தவர் சொல்வீர்.

274. வெள்ளைச் சருகு சேலைக்காரி. விரிந்த கூந்தல் அலங்காரி,
வெளிறின முத்துப்பல் சிங்காரி,
வேண்டுவார் இவளைப் பலபேர். விரும்புதார் எவர்.

275. கருநிறமுடைய பூச்சி, கடுகுக்கும் சற்றுப் பெரிய பூச்சி;
இருட்டு நேரத்தில் திருட்டுத் தினமாய்
உன்னையும், என்னையும், கடித்து உறுஞ்சும் இரத்தம்.
உபத்திரவப் பூச்சிப் பெயர் உரைக்கப்பாரும்.

276. நாற்பது பேரை நல்ல கத்தியால் வெட்டினேன்,
நாற்பதில் ஒருவரும் நாவில் சத்தம் செய்யலை,
நாடும் இரத்தமும் ஒழுகலை.

277. ஒரு காது ஒய்யாரி, ஒரு அங்குல சிங்காரி,
ஒட்டையை அடைக்கிறாள், பொத்தலைப் புரைகிறாள்.

278. வட்ட வடிவத்தில் முகம் உண்டு, திட்டக் கிட்டவாயில்லை.
கிட்டித் தொடும் கையுண்டு, எட்டி நடக்கக் காலில்லை.

279. படிப்பு வாசனை தெரியாத பைங்கிளியாள்,
படிப்புக்குரிய எழுத்தை எழுதிப்
பலபேர் பாராட்டும் பலனைப் பெறுகிறாள்.

280. மாயா ஜால வித்தைக்காரன், மாயமாய் மறைவான்.
மறுகணத்தில் வருவான், ஆயிரம் மைலுக்கு அப்பால்.
அவன் வேலையை, அரை நிமிஷத்தில் காட்டுவான். யார்?

281. கட்டையன், காலில்லாத குட்டையன்,
முட்டைபோலிருந்தாலும் எட்டு கஜதூரம்,
இளைக்காமல் ஓடுவான்; மூக்குக் கிடையாது.
காற்றை வாங்கி வைப்பான்.

282. ஆடி அசைந்து அடி எடுத்து வைத்து,
ஆகாய உயரம் அடிக்கடி கழுத்தை நீட்டிச் செல்லும்,
நிறம் பழுப்பு மிருகம், நீண்டநாள் நீரை நிரப்பிவைக்கும்.
நீங்கள் கண்டால் நிமிர்ந்து பார்ப்பீர்.

283. முட்டையிடத் தெரிந்த மூளிக்கு, அடை கிடந்து.
அவையம் காத்து, அழகு குஞ்சு பொரிக்கத் தெரியலை.

284. அடுக்கடுக்காய் ஆடையை அழகாய் உடுத்துவாள்:
அலங்காரி, அங்காடிக்கு வருவாள் சிங்காரி.
அநேகம் பேர் வந்து அவளை வாங்க வருவார்கள்.

285. சிங்கியும் சிங்கனும். சேர்ந்து கட்டின வீடு,
எங்கும் இது போல இருப்பதில்லை பாரு,
நாட்டில் பார்க்கப் பிரியப் பட்டால்
நாம் பார்க்கலாம் கிணற்றின் மேலே.

286. குச்சி கோலினாலே மெச்சக் கட்டின கூடு.
நச்சி இதனை தேடிப் போனால் காண்பீர் மரக்கிளை மேலே.

287. ஆகாயத்திலே அழகாய் உலாவி
அற்புதக் காட்சியைக் காட்டியவள், பூமியை நாடி
ஓடி வந்து, புத்துயிர் தருகிறாள் மக்களுக்கு.

288. வாயும் வயிறும் இல்லாத வல்லது,
மேயும் வயலில் உள்ள பயிரைச் சாயப்பண்ணினது.
நீயும் அறிவாய், நானும் அறிவேன்.

289. கண்ணுக்குத் தெரியாமல் கைக்கு எட்டாமல்,
காட்டில் ஒளிந்திருந்தாலும் காற்றடிக்கும் திசையிலே
கண்டிடலாம் காரிகையை.

290. தானாகப் பூட்டித் தானாகத் திறக்கும் தண்டவாளப்
பெட்டிக்குள்ளே தனம் என்னும் பணமில்லை,
நகை என்பது நத்த உள்ளது.

291. அக்காள் தங்கை இரண்டுபேர், அவர்களுள்
அதிர்ஷ்டம் உள்ளவர் ஒருத்தி
அனர்த்தம் விளைப்பவள் பின்னொருத்தி

292. அரிசி போலப் பூப் பூக்கிறது.
அழகான பச்சைக் காய் காய்க்கிறது,
அற்புதச் சிவப்புப் பழம் பழுக்கிறது,
அதைப் பறித்துக் காய வைத்தால்
காரம் அதிகம் இருக்கிறது.

293. நல்ல கால்கள், நாலுண்டு, நடக்காது,
வல்லகை இரண்டு உண்டு, வேலை செய்யாது,
உள்ள இடமுண்டு உட்கார,இத்தனையும் இருந்தாலும்
எழுந்திருத்தல் கிடையாது

294. காலமெல்லாம் என்னை வரக்காத்திருப்பார்,
கனமாக நான் வந்தால் இடம் தேடி ஓடி ஒளிவார்.

295; மண்ணைக் கொண்டு செய்த பண்டம்
எண்ணில் இடங்கள் செல்லுமே,
ஏழை வீட்டில் காணலாம், இருப்போன் வீட்டில்
காணலாம். என்னவென்று சொல்லி விட்டால்
இனாம் இன்றே தருகிறேன்.

296. நீண்டு நிற்கும் நெடுமாலுக்கு உடலிலே நாமமுண்டு
முடியிலே பூவுண்டு, அடிமுதல் முடிவரை
போர்வையுண்டு.

297. அரைப்பணத்துக்கு வாங்கின பண்டம்,
ஆறு மாதத்துக்கு வந்து அப்புறமும் மீதம் இருக்குது.

298. எழுதுவதற்கு மை இல்லை. ஆனாலும் எழுதும். மை
இல்லை ஆனாலும் பேனாவுண்டு, பேனாவின் முன்னாலே
கொள்ளை கொள்ளை எழுதலாம்.

299, போகத் தெரியும் பொட்டி மகனுக்கு
போய்த் திரும்ப வரத் தெரியாது குட்டையனுக்கு.

800. வயிறு பசித்தவர்கள் வந்து கூடுமிடம்
வணக்கமாய்க் கேட்டதை வழங்குமிடம்
வாங்கின பொருளுக்குப் பணம் வைத்துப் போகுமிடம்
வழியெல்லாம் காணலாம் வரவேற்புக் கொள்ளலாம்.

801. பளபளப்பு பங்காரு, பார்க்கப் போறேன் உட்காரு.
சிரிக்கப் போகிறேன் சிங்காரி;
நீயும் சேர்ந்து சிரிக்கிறாய் செல்லாயி.
கோபமாய்ப் பார்க்கிறேன் கோமளமே
நீயும் கோபித்துப் பார்க்கிறாய், கோகிலமே;
செய்ததை நீ திருப்பிச் செய்கிறாய் செல்லமணி
உனக்குச் சலாம் சொல்லுறேன் கண்ணுமணி.

802. பத்துக் காசுக் காகிதம், மெத்த உறுதிக் காகிதம்
எத்தனை தூரமென்றாலும்
சத்தியம் அது போய்ச் சேர்ந்திடும்.

803. அரசன் மாளிகை என்றாலும் அக்கறையில்லை.
ஆண்டி குடிசை என்றாலும் அக்கறையில்லை.
ஆசைப்பட்ட நேரம் அங்கே போயிருப்பேன்.

804. கட்டி மாம்பழம் தொப்பென்று விழக்
கண்டவர் இரண்டு பேர், எடுத்தவர் பத்துப் பேர்.
தின்றவர் முப்பத்திரண்டு பேர்
கதையை விடுவித்தால் கற்கண்டு தருகிறேன்.

805. குயவன் வனையாத கூஜா, குண்டு உருவக் கூஜா,
மழைத் தண்ணீர் தங்காத குளம்.
வண்ணான் வெளுக்காத வெள்ளை என்ன?

806. கம்பத்தில் கட்டிக் காற்றிலே பறக்கும்.
கண்டவர் அதற்குக் கனம் பண்ணுவார்.
தொண்டர் படைதான் சூழ்ந்து நின்று
தெண்டனிடும்: தெரிந்தவர் சொல்லுவீர்.

807. அடுப்பிலிருந்து ஆகாயம் சென்றது.
அடுத்திருந்தவர் பிடிக்க முடியலை
அதனுடைய செய்தி அறிந்தவர் சொல்வீர்.

808. இருபுறமும் தலையிருக்கும்; இடையோ சிறுத்திருக்கும்.
இருபுறமும் கயிற்றால் இழுத்துக் கட்டியிருக்கும்.

809. வெயில் காலம் வந்தாலும் சரி.
வேனில் காலம் வந்தாலும் சரி:
வற்றாது குறையாது வண்ணக் குவளை நீர்

310. தக தக தங்க நிறத்தாயி, தண்ணீர் பட்டால்
தன்னிறம் மாறி, கறு கறுத்துக் கருப்பாயி ஆகிறாள்:
கதையை விடுவித்தால் கடிக்கக்
கரும்பு விரும்பித் தருவேன்

311. நீண்டு உயர்ந்த கழிகளை, வேண்டும் அளவு எடுத்து,
இரும்பு உருளையிலிட்டு இருவர் சுற்றச் சுற்ற
இனிப்பு ரசம் வந்தது.

312. கண்ணாடி போட்ட முகத்தானுக்கு
காலும் கையும் கிடையாது. ஆனாலும்
நாள் முழுவதும் நல்லபடி நடக்கிறான்.

313. பல் பல உருவத்தில் வந்தோம் நாங்கள்.
படு கொடு வெய்யிலில் காய்ந்தோம் நாங்கள்.
பற்றிய நெருப்பில் காய்ந்தோம் நாங்கள்.
பற்பல இடங்களுச்குப் பயணம் போனோம் நாங்கள்.

314. வீடுகளிலும் வீதிகளிலும் விதம் விதம் காண்பீர்.
வெளிச்சம் கொடுக்க வேண்டுவீர் இரவில்.
வெகுவாய் மக்கள் விரும்பி நாடுவார்.
விவரம் அறிந்தவர் விரைவில் சொல்லுவீர்?

315. கணக்கற்ற தூரத்துக் கானத்தைக் காதால்
கிட்டக் கேட்டுக் களிப்படைகிறேன்.

316. பந்தடி மட்டைக் குச்சிப் பையனுக்கு
பனங் கொட்டைப் புருஷன் உருவாம்.

317. தண்ணீருக்குள் இருந்து சத்தம் போட்டவன்
தாவிப் பாய்ந்தான் தரைக்கு வந்தான். தத்திக்
குதிக்கிறான். தனியாய் அலைகிறான்.

318. சாம்பல் நிறப் பிராணி. தனித்துத் திரியும் பிராணி.
சண்டைப் போடுது. சத்துருவைக் கண்டதும்.

319. ஓங்கி வளர்ந்த ஒரு கூட்ட மரங்கள்
ஒன்றோடொன்று உராய்ந்து பின்னால்
கரியாகிப் போனதைக் கானலில் கண்டேன்.

220. அன்னம் தண்ணீர் அருந்தப் பழங்கள்
அத்தனையும் நீர் அன்பாய் அளித்து
தன்னந் தனியாய்ச் சிறையில் வைத்து
சித்திரவதை செய்யும் செயலைச்
செப்புவீர் நமக்கு ஒப்பும் விதமாய்?

321. வேட்டை யாட எடுத்துச் செல்லும் வில்லல்ல,
வேணுமென்ற போது விரும்பி வாங்கும் வில்லல்ல
வேண்டாத போது விநோதமாய்த் தோன்றும்.
வேடிக்கை வில் என்ன வில்?

322. தாகத்தைத் தீர்க்க இருக்கும் தனி ருசித் தண்ணீரும்
தேகத்தைக் கழுவ தேவைப்படும். தண்ணீரும்
என்ன தண்ணீர்கள்.

323. முன்னும் பின்னும் வளைந்த கொம்பு.
விரிந்தும் அகன்றும் உள்ள கொம்பு.
நேரே நிமிர்ந்த நெட்டைக் கொம்பு.
குட்டைக் கொம்புகளைக் கொண்ட மிருகம்
கண்டதுண்டானால் நன்றே சொல்வீர் பெயர்.

324. பையன்கள் கையில் படு பாடு படும்.
பட்சியைப் போல பறந்து போகும்.
பல திசை செல்லும். நிச்சயம் இறங்கும்
மிச்சம் காற்று சொச்சமானால்

325. ஏழு கால்கள் எடுத்தடி வைத்தன.
நாலுகால் மிருகம். இருகால் மனிதன்.
அவன் ஊன்றிய தடி இதனாலே ஏழுகாலி
என்பது யார் எனத் தெரிந்தால் நமக்குக் கூறுவீர்.

## 2. யார் இவர்கள்?

1. உலகம் இவரால் இருந்து வருகிற
உயர் பணி செய்யும் உத்தமர் உன்னதர்.
உண்மை தெரிந்தால் உடனே தொழுவோம்.
உன்னையும் என்னையும் காப்பவர் இவர்.
உரை செய்யத் தெரிந்தால் உடனே சொல்வீர்?

2. சிறியோர் பெரியோர் சிரித்து மகிழ
அரிய செயல்கள் அதிசயத் திறன்கள்
ஆற்றி மக்களை ஆனந்திக்க வைத்தவர்.
போற்றிப் புகழும் புதுமை செய்தவர்.
புவியோர் என்றும் புத்திமான் என
புகன்ற இவர் பெயர் புரியக் கூறுவீர்?

3. பேசும் திறத்தால் பெரு நகை விளைத்து
பேசும் படத்தில் பெரும் புகழ் படைத்து

பெற்ற பொருளை உற்றோர்கு உதவி
பேரின்ப நிலையைப் பெற்றவன் தமிழன்
பேர் தெரிந்தவர் பேசுவீர் இப்போ:

4. எண்ணில்லாத மண்ணின் உயிருக்கு
இணையில்லாத இரக்கம் காட்டி
கண்ணைப் போன்று கருணையுடனே
மண்ணுள்ளோரை வாழ வைத்து
விண்ணோர்க் கூட்டம் விரும்பும் ஐயன்
அண்ணல் அரசன் அவன் பெயர் கூறுவீர்.

5. குலத்திலே ஈனனேனும் நலத்திலே தலை சிறந்து,
உலகிலே உண்மைத் தெய்வம்
உணர்வதே அறிவு என்று எண்ணி
உடலை வருத்தியவனும் உயர் பரம் சென்றான் என்றால்
உரைக்கலாம் அவன் பெயரை
உலகினர் உவப்புக் கொள்ள.

6. இல்லறமே இனிதென்றாலும்
துறவறமே மேல் என்று எண்ணி,
துணிவுடனே வெளியேறித் துதி பாடல் பல பாடி
தூநெறி காட்டிய துறவி யார்?

7. புரட்சிக்கு அடிகோலி புத்தெண்ணம் புகுத்துவித்து
புராணமே புழுகு என்று புத்தியினால் தெரிந்து கொள்ள
புதுமை உடைச்செயல் புரிந்து புவியோர்கள் புகழுவாழும்
புரட்சி வீரர் போற்றும் தந்தைபுரிந்தவர் இவர் பெயரை
புகலவே எழுவீர் தொழுவீர்.

8. உயர் குலத்தில் பிறந்தாலும் ஒர் குலமே எல்லாரும்,
உண்மையினை உரைத்ததன்றி ஒப்பற்ற சுதந்தரம் தன்
உயிர் எனவே உரைத்ததனால்
உள் சென்றார் சிறைவாசம்.
உரிமையைப் பெறவேண்டி உள்ளளவும் உபத்திரவம்
உடையவராய் உயிர் நீத்தார்.
உத்தமனும் அவன் பெயரை
உரைத்திடுவீர் உவப்படைவீர்!

9. குன்றொத்த புகழை நன்றாய்ப் பெற்று
குவலயம் முழுவதும் கொள்ளும் கொள்கையை
குறுகிய அடிகளால் கூறிப்போந்த
குலமகன் குணக்குன்று கூறுவீர் யாரெனவே

10. எத்நாட்டவரும் ஏற்றிப் போற்றும்
நன்னெறி வழுவா நற்பணி ஆற்றி
என்றும் மக்கள் இதயத்தில் நிலைக்கும்
சான்ருேன் எனத் தாரணி போற்றும்
குன்றென விளங்கி நின்றவன் அவன்
இன்று அவன் இல்லை; சென்றனன் ப்ரகதி.
என்றபோதிலும் நின்றது அவன் புகழ்
கண்டவர் இவர் பெயர் விண்டிடுவீரே.

11. உலகில் பிறந்த உயிர்களெல்லாம்
உடன் பிறந்தவர் என்னும் உணர்வை
ஊட்டி நமக்கு உயர் வழிகாட்டி
உன்னத நீதியின் உச்சமாய் நின்று
உண்மையை உரைத்த உயர் திருஞானி
உலகில் பெரியார். உரைத்திடும் அவர் பெயர்.

12. தமிழ் நாட்டவரின் தனிப் பெருமகனும்
தமிழனைப் பெற்ற தனையன் எனவே
தரணி மக்கள் சாற்றப் போற்றும்
தக்கோன் மிக்கோன் தமையனும் விளங்கி
தந்திரி மந்திரி விந்தை விவேகி
தலைவனுய்த் தன் கழகம் தழைக்க
தாகம் கொண்டு வேகமாய் வளர்த்து
தமிழர் சென்றும் புகழுற விளங்க
தன் பணியாற்றித் தலை மறைந்தார். அவர்
தயக்கமின்றி இவர் பெயர் சாற்றுவீர் ஏற்றுவீர்?

13. முத்திலும் மெத்த சத்தியம் நீதியை
எத்தகையோரும் சித்தம் மகிழ
இரத்தினம் ஒப்பு இரண்டடிச் செய்யுளில்
இயற்றித் தந்தான். இனிய தமிழில்
இன்னேறலே தென்னாட்டவர்க்கு
என்றும் புகழும் குன்றுயர் பேரும்
நின்றுள்ளது நினைக்கப் பெருமை
நீங்கள் அறிந்தால் நிகழ்த்திடும் இவர் பெயர்.

14. பாவிகள் பல்லோர் பரகதி அடைய
மேவி உலகில் மேம்பட விளங்கி
கூவி நீதியைக் கூறி உலகினில்
ஆவியை நமக்காய் அளித்தான் சிலுவையில்
அன்பின் ரூபன், அருமை இரட்சகன்,
ஆண்டவன், அற்புதன், அதிசய நாதன்

அவனே அண்டினோர் அருளைப் பெறுவர்.
அறிந்தவர் இவரை அறைகுவீர் யாரென ?

15. இந்திய நாட்டின் இணையிலாத் தந்தை
அந்தி சந்தியும் அமைதியை நிலவி
ஆங்கிலத் தளையும் அடிமைத் தனமும்
அகன்று மக்கள் அகமகிழ்வடைய
அரும்பாடு பட்ட அண்ணல் அமரன்
இந்திய விடுதலை இதயத்தில் தங்க
எந்த இன்னலும் வந்திட்டபோதும்
சொந்த நாட்டின் சுதந்தரம் தன்னுயிர்
விந்தையாக விளம்பிய வீரன்
எந்தை எனத் தக்கோனை இயம்பிடுவீரே ?

16. இந்திய நாட்டில் இருப்பவர் எவரினும்
முந்தையர் முதல்வர் முறையுறக் கூறும்
தந்தைக்கு ஒப்பார் அந்தணர் அண்ணல்.
சிந்தையில் அன்பும் சிறந்த பண்பும்
விந்தையாம் நூல்கள் விதம் விதம் இயற்றி
சொந்த நாட்டின் சுதந்தரம் வேண்டி,
காந்திமகானைக் கலந்து இருந்து
எந்த மக்களும் வந்து வணங்கிட
சிந்தாச் சிறப்பும் சீரிய புகழும்
பந்தபாசப் பலரிடம் காட்டும்
நந்தம் குருப்பெயர் நவில்வீர் மகிழ்வீர்.

17. இந்தியர் எவரும் இன்புற்று வாழ
எண்ணங்கொண்டு ஏழைபோல் உடுத்து
எங்கும் நடந்து ஆங்காங்கு தங்கி
எளியவர் நிலையை எடுத்துக் கூறி
ஏற்பது இகழ்ச்சி என்பதை மறந்து
எல்லாரிடத்தும் ஏற்று நிலத்தை
ஏரால் உழுது பாரோர் பிழைக்க
ஏற்றதைச் செய்தார்; எழிலுற நின்றார்.
என்ன பெயரென இன்னே இயம்புவீர்.

18. பல பல காலம் பழக்கமாய் வந்த
பாழாம் வழக்கம் பறக்கடித்து
பாரியர் உயிரைப் பாரினில் காத்து
பந்து மித்திரர் பலபேர் உடனே
பரமானந்தம் பரிவாய் உற்று
பண்புடன் வாழப் பாதை வகுத்தான்.

மண்புகழ் கொண்டான்; மானிட வீரன்
எண்ணரும் செயலைப் பண்ணி முடித்தான்.
கண்ணெனக் கருதும் அண்ணலாம் அவரை
புண்ணியன் என்று போற்றுதல் நலமாம்.
கண்ணிய கனவான். கழறுவீர் பெயரே?

19. ஆங்கில நாட்டில் அவதரித்துப்பின்
அந்நிய நாடாம் இந்தியா வந்தே
அருமைத் தமிழை ஆர்வமாய்க் கற்று
அநேகரைக் கவரும் ஆசை இசையை
ஆரும் மெச்ச அதிலும் தேர்ச்சி
அடைந்த பின்னர் அடைவாய்ப் பாடி
அகம் மகிழ்வித்தார் அற்புதம் அதிசயம்
அறம் பொருள் இன்பம் அரியவீடடங்கிய
அற்புதக் குறளையும் ஆராய்ந்தறிந்து
ஆங்கில மொழியில் ஆக்குவித்தனன்
அன்னோனை அறிவர். அறிஞர் பலபேர்.
அறிந்தால் அவர் பெயரை தெரிந்திடச் சொல்லும்.

20. ஐரோப்பாவென அழைத்திடும் கண்டம்
அகன்று வந்தார் ஆன்றோன் ஞானி
அந்நிய நாட்டை அன்னையாய் கொண்டார்.
தென்னிந்தியாவில் தெள்ளமுதத் தமிழ்
தேர்ந்த மேதையாய்த் திகழ்ந்தனர் மகிழ்ந்தனர்
தேரும் தமிழர் தேடும் சொல்லின்
தெளிவு தெரிய செய்தாள் சிறந்த
தமிழ் அகராதி தந்தையாமிவர்.
சந்நியாசியுடையைத் தரித்துத் திரிந்தார்
சகலரும் போற்றும் சாமியாரானார்
சாற்றுவீர் இவர் பெயர், போற்றுவீர் நாளும்.

21. இளமையித் சிறுவர் எதையும் எளிதாய்
எண்ணிக் கற்க ஏற்ற நல்பருவம்
என்பதை உணர்ந்த எழில் மூதாட்டி
இனிமைத் தமிழில் இனிய நூல் சில
இயற்றித் தந்தனள். இதயம் மகிழ
இன்று நம் பள்ளியில் இளஞ்சிறுவர் எவரும்
இசையுடன் பாடி இன்புறுகின்றார்.
இத்தகைப் பணியை மெத்தவும் செய்த
உத்தமி பேரினை உவந்திட உரைப்பீர்:

22. பெண்குலத் திலகம் பேர் புகழ் படைத்தாள்
புண்ணிய புத்திரி கண்ணிய குண மகள்

அந்நாள் பாண்டியன் அரசவை முன்னே
திண்ணிய கற்பினைத் தெளிவுறக் காட்டினாள்
மண்ணும் விண்ணும் மகிழ்ந்தனர் சான்றாய்
இந்நாளும் நாம் இவள் கற்புச் சிகரம்
என்று ஏற்றுவோம் இசைவாய் போற்றுவோம்
அன்று நம் நாட்டில் அவதரித்தாளை
சென்ற காலம் சிறப்புற்றோங்கிய
சீரிய செல்விபேர் செப்புவீர் செல்வரே.

23. அமெரிக்காவென அழைத்திடும் கண்டம்
அருமை பெருமை ஆனதோர் அன்பர்
அனைவரும் கொண்ட அதன் ஒரு நாட்டில்
அதிசயப் பிறவி அம்மையார் ஒருவர்
அவதரித்தனர் அந்தகராக
அதனோடு பேச்சும் அற்றவரானார்
ஆயினும் அறிவு ஆற்றலால் அவனி
அதிசயித்திட அற்புதச் செயல் பல
அற்றினார் சாற்றினார்: ஆச்சரியப்பட
அன்னார் இன்று அமரராயினார்
அறிவோம் நம்மில் அநேகர் அவரை
அம்மை பெயரை அறியக் கூறுமே.

24. தமிழ்நாட்டின் தனிப்பெருமகனும்
தரணியோர் போற்றும் திறன்மிக்குடையோன்
தாரம் தனக்கின்றி நேரம் முழுவதும்
தாயகப் பணிக்குத் தத்தம் செய்து
தாகைசால் காங்கிரஸ் தலைவனாய் விளங்கி
தக்க சேவையை ஒக்கும் நேர்மையில்
தாபத்தோடு தான் நிறைவேற்றிய
தலைசிறந்தார் பெயர் கற்ற வருவீரே.

25. இந்திய தேச இயற்கையழகை
எவரும் சாற்றுவர் ஏற்றமாய்ப் போற்றுவர்
இத்தகைய நாட்டின் உத்தம மகளாய்
உதித்தனள் உயர்குல உமைதனைக் கொப்பாய்
உலகம் அறியார் ஒருவருமில்லார்
உவமம் உரையா உவந்திடும் கல்வி
ஓதி உணர்ந்தார் நீதியை அறிந்தார்
மாதிவர் பெயரை மக்கள் மறவார்
மாநில முதல்வராய் மனமகிழ் பணியை
மாசுமறுவின்றிப் பேசும் முறையில்
வீசும் புகழ்பட வெற்றியுமுற்றிர

வீரமாய் ஆற்றும் விவேக மகள்பேர்
விளங்கிக் கொண்டவர் விரைவில் விளம்புவீர்

## 3. ஏன்? எதனுல்?

1. முகமலர்ச்சி அடைவதும்
முளைத்த பயிர் நலிவதும் ஏன்?

2. தூக்க முடியாது சோர்வடைவதும்
துரை என்று பலர் துதிப்பதும் ஏன்?

3. மிகுந்த நோவு உண்டாவதும்
மிளகு இரசம் மணப்பதும் ஏன்?

4. வாணிகம் வளர்ந்து விருத்தியாவதும்
வாழ்க்கையைப் பட்சி நடத்துவதும் எதனுல்?

5. தூக்கம் பிடிக்காமல் ஏக்கம் கொள்வதும்
சாக்குப் பை தூக்க சங்கடப் படுவதும் ஏன்?

6. நேரம் பார்க்க நிமித்தம் வருவதும்
நெற்பயிர் அறுக்க நேர்வதும் எதனுல்?

7. ஊரார் மகன் உமக்கு மருமகன் ஆவதும்
உள்ள சொத்து இல்லாது போவதும் ஏன்?

8. அக்காள் அடுத்த வீட்டுக்கு அடி எடுத்து வைப்பதும்
முக்காலாக இருந்தது முழுதாவதும் எதனுல்?

9. அரசன் ஆட்சி பெருமை அடைவதும்
ஐயாசாமி அழிந்து ஆண்டியாவதும் ஏன்?

19. கைக் குழந்தைக் கண் கலங்கி அழுவானேன்
கலம் குப்பை வீட்டில் சேர்வானேன்?

11. முடவன் நடக்க முடியாதிருப்பதும்
முக்கால் முழுசு ஆகாதிருப்பதும் ஏன்?

12. வயல் நிலம் வளமடையாது போவதும்
வழி நடப்பவன் உடை உடல் நனைந்து விடுவதும் ஏன்?

13. பழைந் துணி பட்டென்று அறுவதும்
பையன்கள் அழுகை பெய்ய நிற்பதும் ஏன்?

14. கண்ணுடிப் பாத்திரம் கண்டிப்பாய் உடைவதும்
காய்ச்சல் அதிகமாய்க் காண்பதும் ஏன்?

15. ஏழை நிலை எப்படியும் உயர்வதும்
எவரும் இன்பம் கொள்வதும் எதனுல்?

16. அம்மி மெள்ள மெள்ள நகர்வதும்
அடங்காதமாடு அடங்கிவிடுவதும் எதனால் ?

17. ஈக்கள் மலரை நாடிச் செல்வதேன்
இருவர் ஆண் பெண் இணைக்கப்படுவதேன் ?

18. மேல் மாடி ஏறிப்போவதும்
விலைபேசி தானியம் வாங்குவதும் எதனால் ?

19. உண்ணும் பண்டங்களுக்கு ருசி தருவதும்
உதவாது குடிக்கக் கடல்நீர் என்பதும் எதனால்?

20. மங்கையர் அழகாய்த் தோன்றுவதும்
மனத்தில் மகிழ்ச்சி இருக்குது என்பதும் எதனால் ?

21. பணம் பெருக்கம் அடைவதும்
பஞ்சைகள் நெஞ்சம் உருக்குவதும் எதனால் ?

22. பாத்திரம் பளபளப்படைவதும்
பகல் போல இரவும் காண்பதும் எதனால் ?

23. காலத்தைச் சரியாய்க் கணிப்பதும்
கழுத்தில் பார்க்க அழகாய் இருப்பதும் எதனால் ?

24. ஒன்று நாலாக ஏறிப் போவதும்
நன்றாக வேலையை முடிக்க முனைவதும் எதனால் ?

25. கூடை முறம் பின்னுவதும்
கூரையை மூட வேண்டுவதும் எதனால் ?

26. ஆடுமாடுகள் அழகாக வளருவதும்
அசைபோட அவை ஆசைப்படுவதும் ஏன் ?

27. கல்வி பெருகி வளர்வதும்
கயிறு முறுக்கு ஏறத் திரிப்பதும் எதனால் ?

28. கட்டி உடலில் உடைவதேன் ?
காய் மரத்திலிருந்து விழுவானேன் ?

29. சொத்துச் சுகம் வருவானேன்
பத்தும் செய்யச் சித்தம் செய்வானேன் ?

30. ஆஸ்தி அழிந்து ஏழை ஆவானேன்
ஆண்டியாய் அரசன் ஆவானேன் ?

31. தேசத்தைப் போரிட்டுப் பிடிப்பதும்
தேசம் பலமுள்ளதெனப் பகை நடுங்குவதும் எதனால் ?

32. குருவி குடியிருந்து வாழுவதும்
கோரிய வியாபாரம் விருத்தி அடைவதும் எதனால் ?

33. இன்னதேசம் என்று நிதானிக்க ஏதுவாவதும்
தின்னும் பதார்த்தத்திற்காகும் காய் எனக் கணிப்பதும்
எதனுல் ?

34. கீழ் குலத்தவன் மேல்குலத்தவனுவதும்
மேல் குலத்தவன் கீழ் குலத்தவனுவதும் எதனுல் ?

35. பார்க்கச் சகியாத பகைவன் நண்பனுவதும்
பாவியும் பகவானுக்குகந்தவன் ஆவதும் எதனுல் ?

36. வீட்டுக்குத் தகுந்த பெண் என்று சொல்லுவதும்
நாட்டம் கொண்டு படிக்க
நல்ல நூல் என்று சொல்வதும் எதனுல் ?

37. கண்டவர் கனம்பண்ணக் கை கூப்புவதும்
கண்ணுடையவர் என்று மக்கள் கருதுவதும் எதனுல் ?

38. ஊரார் உம்மை உபசரிக்க எழுவதும்
உவப்புடன் உதவி செய்ய ஊக்கம் கொள்வதும் எதனுல் ?

39. உடல் மெலிந்து நடை தளர்ந்து போவதும்
உற்சாகமின்றி ஒன்றும் செய்ய
மனம் செல்லாததும் எதனுல் ?

40. நாலு பேர் கண்டு நல்லவன் என்று சொல்வதும்
நாட்டில் உள்ளவர் கூட்டமாய்ப் போற்றுவதும் எதனுல் ?

41. பயிர் பச்சை பசுமையாய் வளர்வதும்
உயிர் உள்ளவன் ஊக்கமாய்
உழைத்துப் பிழைப்பதும் எதனுல் ?

42. சாப்பிடும் ஆப்பம் சரியாய்த் தயாராவதும்
சரீரத்திலே சில சமயம் புண்புறப்படுவதும் எதனுல் ?

43. பிள்ளை கேட்டதைப் பெற்றோர் வாங்கித் தருவதும்
பிறர் வீட்டுக் குழந்தையைத் தூக்கி எடுத்து
முத்தம் இடுவதும் எதனுல் ?

44. வீட்டிலிருந்து ஒருவர் சொல்லாமல் வெளியேறுவதும்
வீணுகத் தற்கொலை செய்யத் துணிவதும் எதனுல் ?

45. கொண்ட வெண்கலச் சாமான் சத்தமிடுவதும்
கோவிலுக்குத் தேங்காய் பழம் சூடம்
கொண்டு போவதும் எதனுல் ?

46. உடலுக்கு வலிவும் சுகமும் வருவதும்
ஊதியம் பிழைப்புக்குக் கிடைப்பதும் எதனுல் ?

47. பெரிய வீட்டுப் பிள்ளை பிசாசுப் பிள்ளையாவதும்,
பிசாசுப் பிள்ளையும், பெற்றோர் மெச்சும் பிள்ளை
ஆவதும் எதனுல் ?

84. பலதரம் படிப்பில் தவறியும் தேர்வு பெறுவதும்
பாழ்பட்டதும் பயனுடையதாக்குவதும் எதனுல் ?

49. அண்ணனுக்கும் தம்பிக்கும் பகையாவதும்
அண்டை வீட்டார் கண்டு நகைப்பதும் எதனுல் ?

50. கோபக்காரனையும் குடிகாரனையும் குணமாக்கும் " மை ";
கொண்ட கணவன் குணக்கேடனுலும்
குணசாலி ஆக்கும் மை. என்ன மை ?

51. கோடி கோடியாய்ச் சம்பாதித்த பணம் குப்பையாவதும்
கொண்டாட்ட வாழ்க்கை
திண்டாட்டமாய் முடிவதும். எதனுல் ?

52. ஊருக்கும் நாட்டுக்கும் பேர் போனவன் சீரழிவதும்
சந்தி சிரிக்கத் தலை காட்டாமல் திரிவதும் எதனுல் ?

53. காடு நாடாகி, வீடு வாசல் விரிவாவதும்
கடை கண்ணிகள் கட்டப் படுவதும் எதனுல் ?

54. முகவாட்டம் வருவதும், அகக்கோட்டம் அண்டவதும்,
மிக நாட்டம் கொள்வதும், எதனுல் ?

55. வாழ்க்கையில் வெறுக்கையும்,
வாழ நினைப்பதில் வருத்தமும் வருவானேன் ?

56. ஊரில் உள்ளவர்கள் கலகம் செய்வானேன்
நாறும் விதமாய்க் காரியம் நடப்பானேன் ?

57. செத்தும் சாவாதவர் எனப் பெயர் பெறுவதும்,
உத்தமர் என்றும் உலகம் போற்றுவதும் எதனுல் ?

58. சண்டை சச்சரவு இல்லாமல் வாழ்தலும்
கண்டோர் மனங் களித்துப் புகழ்தலும் எதனுல் ?

59. உயிருக்கு மேலானதென உரைப்பதும்,
ஊரெங்கும் மக்கள் உவந்து மகிழ்வதும் எதனுல் ?

60. உன்னையும் என்னையும் உலகம் நாடி வருவதும்,
கண்ணியம் கௌரவம் கனம் தருவதும் எதனுல் ?

61. விரிந்த கூந்தல் பிரிந்த தலைமுடி சரிந்து விழாதிருப்பதும்,
எரிந்து விளக்கு வெளிச்சம் வீசுவதும் எதனுல் ?

62. துஷ்ட மிருகம் இஷ்டப்படி நடக்கவும்,
கஷ்டமான தொழிலும் கடிதில் கற்கவும்
காரியம் செய்வது எதனுல் ?

63. தண்ணீரின் தாமரை மலர்வதும்
எண்ணிலா ஜீவன் உயிர் வாழ்வதும், எதனுல் ?

64. அந்நிய ஆண்மகன் அத்தான் ஆவதும்,
அன்பு அவர் நம்மிடம் காட்டுவதும் எதனால்?

65. பேரும் ஊரும் தெரியாதவனுக்குப்
பெண்ணைக் கொடுப்பதும்,
பெற்றோர் அதற்குப் பிரியம் தெரிவிப்பதும், எதனால்?

66. பெட்டி, பேழை, சட்டி, முட்டி, பட்டி, தொட்டி,
பல பண்டம், வேண்டுவதும்,
உடுக்கை, படுக்கை, எடுக்கை, கொடுக்கை
எல்லாம் வேண்டுவதும், எதனால்

67. அறிவைப் பலபேர் அறிய உதவுவதும்
ஆத்தும அமைதிக்கு அனுகூலமாக அமைவதும், எதனால்?

68. கழுத்து பெண்களுக்கு அழகாகக் காண்பதும்
காலம் இரவு பகல் எனக் கணிப்பதும், எதனால்?

69. பேசாமல் பேசிப் பிரியம் கொள்ள வைப்பதும்,
பேச்சிலும் பேருதவி செய்ய இருப்பதும், எது?

70. தூக்கம் பிடிக்காமல் துயரப்படுவதும்
ஏக்கத்தாலே எல்லாம் இருட்டாய்த் தெரிவதும் எதனால்?

71. செங்கோல் அரசன் க்ஷேமடைவதும்,
க்ஷேமமாய் வாழ்ந்தவன் சீரழிந்து கெடுவதும், எதனால்?

72. கழனியில் உண்டாகும் பயிரின் தன்மையும்
கஷ்டப்பாட்டுக்கு வரும் நவனை அறிவதும், எதனால்?

73. உள்ளத்தில் கள்ளம் உடையவன் என்பதும்,
நல்ல மனமும், சொல்லில் உண்மையும் உடையவன்
என்பதும் அறிவது, எதனால்?

74. வயல் நிலம் பாழாகிக் கிடப்பானேன்
வாலிபர் வழி தப்பி நடப்பானேன்?

75. தட்டுக் கெட்டுத் தடுமாறித் திரிவானேன்
எட்டடுக்கு மெத்தை வீட்டுக்காரன் ஏழை ஆவானேன்.

76. தலை முடி நரைத்துத் தளர்நடை கண்டு
தன்னுபடி சாப்பாட்டில் இருப்பது எதனால்?

77. காதுக்கு இன்பமும் கருத்துக்குக் களிப்பும்,
கஷ்டத்திற்குத் தகுந்த ஊதியமும், வருவது எதனால்?

78. ஆசைப்பட்ட பண்டம்-அதே நேரம் வாங்கவும்,
நேசிக்கப்பட்ட இன ஜனத்தை நேரில்
எதிர்கொள்ளப் போவதும், எதனால்?

79. காலையில் இலைமேல் துளிகள் காண்பதும்
கம்பளி கொண்டு உடலைக் காப்பதும் எதனால் ?

80. சதிரவன் மறைந்து கனவிருள் வருவதும்
கனம் பண்ணப் பெரியோரைக்
காணச்சொல்வதும்எதனால் ?

81. வெயிலில் கண்ட வியர்வை போக்குவதும்
வெந்து புழுங்கும் அறையை விரும்புதும் எதனால் ?

82. பிறர்தம்மொழியைப் பிரியமாய்ப் புரிந்து கொள்வதும்
பிழைபடாது ஒருவரை விளங்கிக்கொள்வதும் எதனால் ?

83. விளையும் பயிர் வீணாகாது காபந்து செய்வதும்
விக்கினம் விளைச்சலுக்கு விளையாதிருப்பதும் எதனால் ?

84. பிள்ளைகள் அழாமல் வைக்கச் செய்வதும்
பிரிந்தநூலைச்சேர்த்துக் கெட்டியாய் வைப்பதும்எதனால்?

85. இட்டிலி பாத்திரத்தில் அவிக்கப்படுவதும்
இரயில் வண்டி தண்டவாளத்தில்
தடதடவென ஓடுவதும் எதனால்?

86. ஆதியில் மக்கள் அமர் புரிந்ததும்
அழகான பறவையின் ஆருயிர் போக்கினதும், எதனால் ?

87. நாய் எலும்பைக் கடித்து நொறுக்குவதும்
நல்லவிதமாய்ச் சொற்களை உச்சரிப்பதும் எதனால் ?

88. உடலில் உஷ்ணம் இருப்பதும்,
உடனடியாய்ப் பாலை அடுப்பிலிருந்து இறக்குவதும் ஏன் ?

89. வண்ணான் கழுதை கால் வளைவதும்,
எர்நேரமும் இரவில் விழித்தெழுவதும் எதனால் ?

90. வீட்டுக்குத் தாழிட்டு வெளியே போவதும்
வெளியே நாயைக் காவலாய் வைப்பதும் ஏன் ?

91. காய் கறிகளைத் தலையில் சுமந்து செல்வதும்
கடைச் சாமான்களைக் லகயில் வீடு
கொண்டு வருவதும் எதனால் ?

92. உன் எதிர் காலத்தைக் கணிக்க உதவுவதும்
எண்ண எழுத அறியாதவன் கடன் பெற
உதவுவதும் எதனால் ?

93. சாதம் வெந்து புழுங்குவதும்
தண்ணீர் போல் வியர்வை ஒழுகுவதும் எதனால் ?

94. கைக்குழந்தை வளரக் கைகண்ட உணவும்
கடுநோய்கண்டு கஷ்டப்படுவருக்கும் உதவும்உணவும்எது?

95. உள்ளதைத் திருடனிடமிருந்து அறிவதும்
கள்ளத்தனத்தை மெள்ளப்போக்கச்செய்வதும்,எதனல்?

96. பந்துக்களும் நம்மைப் பகைக்கத் தொடங்குவதும்
பாலும் குடிக்கப் பிரிய மற்றுப் போவதும் எதனுல்?

97. மனத்தில் உள்ளதை மறைக்காமல் சொல்வதும்
மனைவிக்குக் கேட்டதை மறுக்காமல் கொடுப்பதும்
எதனுல்?

99. கும்பல் கும்பலாய் மக்கள் சேர்ந்து செல்வதும்,
கூட்டமாய்க் கூடி சாவடியில் படுப்பதும் எதனுல்?

100. அடிக்கடி ஏழைகள் அன்னசாலை செல்வதும்
அற்பக் கூழையும் ஆவலாய்க் குடிப்பதும், எதனுல்?

101. ஊறுகாய் கெடாமல் இருக்கப் பண்ணுவதும்,
நாறும் பண்டம் நல்ல விதம் செய்வதும், எதனுல்?

102. தந்தை தாய்க்குத் தனிப் பெருமை வருவதும்
கந்தைத் துணிகட்டி கஞ்சிக்கு அலைவதும் யாரல்?

102. வெளுத்த துணி விறைப்பாக இருப்பதும்,
வெகுவாக வியாதிப் பட்டவர் உயிர் வாழ்வதும்,எதனுல்?

103. நாளும் வாழ்க! நலமுற்று இருக்க! என வாழ்த்துவதும்
நலிந்து மெலிந்து நாசமாய்ப் போக எனச்
சபிப்பதும், எதனுல்?

104. வந்தது வரட்டும். போனது போகட்டும்.
என்ற புத்தி வருவதும், சொந்தமாய் எதையும்
செய்யப் போவதும், எதனுல்?

105. இருந்தது இருந்தாப்போல் இருக்கை விட்டுச் செல்வதும்
மருந்தென்று எடுத்து மயக்க மருந்தை அருந்தப்
போவதும், எதனுல்?

106. நாட்டின் பழமையை நாம் அறிவதும்
நமது முன்னோர் நலனைத் தெரிவதும், எதனுல்?

107. விளக்கு எரிந்து பிரகாசிக்கப் பண்ணுவதும்
விளையாட்டுப் பிள்ளை வேலையை
விரும்பச் செய்வதும் எதனுல்?

108. ஊறுகாய் ஊசிப் போய் உதவாது போவதும்
ஒழுங்கற்ற அறை பளிங்கு போல் ஆவதும், எதனுல்?

109. அடங்காத பிள்ளையை அடங்கச் செய்வதும்
மடங்காத மாட்டைப் பணியச் செய்வதும் எதனால்?

110. அடைய முடியாததைத் அடைந்து கொள்வதும்
ஆண்டவனையும் நம் அருகே வரச் செய்வதும் எதனால்?

111. பருக அருமைப் பானம் செய்வதும்
பந்தினர் வந்தால் பட்சமாய் உபசரிப்பதும் எதனால்?

112. பார்வை பஞ்சடைந்தது போல் தெரிவதும்
படுத்து இளைப்பாறினால் பரவாயில்லை என்பதும், எதனால்?

113. காயத்தால் உண்டான எரிச்சலைத் தணிப்பதும்
காய்கறி பொறியல் வறுவல் செய்வதும், எதனால்?

114. அத்தை பெண்ணை மணஞ் செய்யக் கேட்பதும்
அத்தானிடம் எதையும் வேண்டி அலட்டுவதும், எதனால்?

115. வீட்டுக்குள்ளே அடுப்பு எரிவதை அறிவதும்
வெள்ளை நிறச் சுவர் வெளிறிக் காண்பதும், எதனால்?

116. கொழு கொழு என்று கன்றுக் குட்டி காண்பதும்
மழ மழவென்று பயிர் வளர்வதும், எதனால்?

117. அடிக்கடி நகந்தால் தேகத்தைச் சொரிவதும்
அடிக்கடி ஆடையை அகற்றுவதும், எதனால்?

228. முகம் மூதேவி போலத் தோற்றம் அளிப்பதும்
நகத்தால் அடிக்கடி தலையைச் சொரிவதும், எதனால்?

119. கடன் கொடுத்தவனைக் காண நாணுவதும்
உடனே வீட்டைக் காலி செய்வதும், எதனால்?

120. கட்டடச் சுவர்களைக் கட்டி முடிப்பதும்
கனமான மதில்களைக் கட்டாயம் அமைப்பதும், எதனால்?

121. தாமரை, தண்ணீரில் மலர்ந்து காண்பதும்
தாரணியில் பயிர் பச்சை தழைப்பதும், எதனால்?

122. இரவில் நட்சத்திரம் நன்றாய்த் தெரியாததும்
இருந்தால் போல் எங்கும் இருளாயிருப்பதும், எதனால்?

123. பாறைக் கற்களை உடைத்து எடுப்பதும்
பாவைகளைக் கற்களில் செதுக்கிக் காண்பதும், எதனால்?

124. காட்சிகளைக் கண்டு களித்து மகிழ்வதும்
கானகத்துப் பறவை பூக்களைப் பார்த்துப் பூரிப்பதும், எதனால்?

125. இந்திய சுதந்திரம் அடைய அடிகோலியவரும்
அடிக்கடி சிறையில் அடைபட்டு அமரரானவரும், யார்?

# 4. என்ன ?

1. உனக்கும் எனக்கும் இருக்கும் காரம்
உற்றார் உறவோர் விரும்பாக் காரம். என்ன காரம்?

2. உடம்புக்கு உஷ்ணத்தை உண்டு பண்ணும் குணம்
உடன் பிறந்தார் உற்றாரை ஓட்டி அடிக்கும் குணம்
என்ன குணம்?

3. என்னையும் உன்னையும் கெடுக்கும் ஆமை
எவரையும் என்றும் கெடுக்கும் ஆமை. என்ன ஆமை?

4. பொன்னணி மாதர்க்குப் பொருந்தாச் சரம்
பொறுமை அற்றவர் போற்றும் சரம். என்ன சரம்?

6. பல்காரம் பட்சணத்துக்கு உதவும் கரை
பருகும் பழரசபானத்துக்குத் தேவை கரை. என்ன கரை?

7. உரிக்க உரிக்க தோவான காயம்
கறிபொறிக்கக் கட்டாயம் தேவைக்காயம். என்னகாயம்?

8. உயிரைக் கொல்ல உண்டாகும் மாலை
உடலை உருக்கி உரிய நிறம் மாற்றும் மாலை. என்ன மாலை?

9. எல்லாருடைய வீட்டிலும் இருக்கும். கை
இடிக்கப் பிடிக்க வேண்டும், கை. என்ன கை?

10. சண்டை சச்சரவு காணுத் தானம்
அண்ட நாயகன் அதிகம் விரும்பும் தானம்.
என்ன தானம்?

11. கற்றவரும் மற்றவரும் கலங்கும் வரம்
கண்ணியத்தைக் கனவீனம் ஆக்கும் வரம். என்ன வரம்?

12. தானத்தில் எல்லாம் சிறந்த தானம்
ஞானமாய்க் காரியத்தை நடத்தும் தானம்.
என்ன தானம்?

13. உடலை உருக்கும் மை, உறக்கத்தைப் போக்கும் மை.
உற்சாகம் குறைக்கும் மை. என்ன மை?

14. வீட்டுப் பெண்களுக்குத் தினம் வேண்டும் பை
வேகும் பண்டத்தை எடுக்க உதவும் பை. என்ன பை?

15. புதுப் பானை புது உடுப்பு வாங்கும் கல்
புதுப் புது ஆடைகள் பொலியும் கல். என்ன கல்?

16. காய்கறி ருசிக்குப் போடும் பூ
காட்டிலிருந்து எடுத்து வந்த பூ. என்ன பூ?

17. ஐந்து பணம் தந்தாலும் ஆகாத சரம்
எந்த நேரமும் இருக்க வேண்டாத சரம். என்ன சரம்?

18. ஆரும் விரும்பாத சீர் கெட்ட காரம்
ஆணையும் பெண்ணையும் அடியோடு அழிக்கும் காரம்
என்ன காரம்?

19. உலகம் முழுவதும் உவக்கும் காரம்
உதவி அற்றவர்க்கு உதவும் காரம் என்ன காரம்?

20. செய்ந்நன்றி மறந்து தீமை விளைவிக்கும் காரம்
சென்மத்தில் எவரும் திடுக்கிடும் காரம். என்ன காரம்?

21. ஆ' என்று வாயைத் திறக்கும் பத்து
அறியாமல் மக்களை அணுகும் பத்து. என்ன பத்து?

22 அறியாமல் புரியாமல் அடையும் மத்து
ஆச்சரியப்பட அறியாமல் நேரும் பத்து. என்ன பத்து?

23. வெல்லம் சர்க்கரை போல் இனிக்கும் கண்டு
வெகுவாய்ச் சிறுவர் விரும்பிடும் கண்டு. என்ன கண்டு?

24 ஆடு மாடுகளை அடைக்கும் பட்டி அல்ல,
அனைவர் படுக்கைக்கும் ஆகும் பட்டி. என்ன பட்டி?

25. போர் வீரர் கையில் இருக்கும் வாள் அல்ல,
போற்றும் புத்ரை அழிக்கும் வாள். என்ன வாள்?

26. வேலை வெட்டி செய்யாத வெறு"மா"
வீண் காலம் கழிப்பார் விரும்பும் "மா". என்ன மா?

27. அரிசியை அறைத்து ஆக்கும்"மா" அல்ல
அன்பாகப் பெண்களை அழைக்கும்"மா" என்ன "மா"

28. பால் கறக்க வீட்டில் வளர்க்கும் மாடு அல்ல
பாரத்தை இலேசாக எடுக்கும் மாடு. என்ன மாடு?

29. கனம் பண்ணக் கழுத்திலிடும் மாலை அல்ல
கவனிக்காது விட்டு விட்டால் சாகடிக்கும் மாலை
என்ன மாலை?

30. தூரத்தில் உள்ளவர்கள் கேளாத ஓசை
துட்டுக்கொடுத்து மக்கள் பெற்றிடும் ஓசை. என்ன ஓசை?

31. நானும் நீயும் நாடாத நாட்டுக் காய்
நாட்டிலே மக்கள் கண்டால் ஓட்டிடும் காய்.
என்ன காய்?

32. வெட்டுக்கும் கிள்ளுக்கும் வந்த காயம் அல்ல
வெகு ருசி குழம்புக்குக்கொடுக்கும் காயம். என்ன காயம்?

33. நீள நீளக் கோல் போல நாம் காணும் காய்
நிதம்நிதம் மக்கள் வாங்கிச் சமைக்கும் காய். என்ன காய்?

34. வட்டமாய்ச் சதுரமாய் வடித்த கல்
வடை தோசை மாவு ஆட்ட அமைந்த கல். என்ன கல்?

35. பார்க்கச் சகியாத படுமோச மணமும்
பலர் பார்த்துப் பண்ணி வைக்கும் மணமும்.
என்ன மணம்?

36. மக்கள் போய்ப் பண்டம் வாங்காத கடை
மறைவாக வீட்டின் பின் இருக்கும் கடை. என்ன கடை?

37. தண்ணீரைத் தேக்கி வைக்கும் அணை அல்ல,
மண்ணோர்கள் மாலையில் தேடும் அணை. என்ன அணை?

38. நாடக மேடையில் காணும் திரை அல்ல
நாளும் வெயில் எரிக்கும் மாதத் திரை. என்ன திரை?

39. மக்களுக்குள் மதிப்பு அதிகம் உள்ள திரி,
மன்னர்களுக்கு மதி சொல்லும் மகிமைத் திரி. என்ன திரி?

40. கடையிலே வைத்து வைக்கும் பாக்கி அல்ல
கண் மூடி திறக்கும் முன்னே உயிரைக் களையும் பாக்கி,
என்ன பாக்கி?

41. ஆயிரம் சிறுவர்களு அடங்கும் கூடம்,
ஆசையாய் மக்கள் செல்லும் கூடம். என்ன கூடம்?

42. அறிவில்லாதவரைச் சொல்லும் மட்டி அல்ல
அகப்பட்ட எதையும் அடித்து நொறுக்கும் மட்டி.
என்ன மட்டி?

43. சுமை சுமையாய் இருக்கும் கோல்
சுகமாக ஆடு மாடு தின்னும் கோல். என்ன கோல்?

44. குழம்புக்கும் கறிக்கும் வேண்டும் சாலே
குதூகலமாய்த் தோசை தின்ன வைக்கும் சாலே.
என்ன சாலே?

45. செய்த தவறுக்கு வேண்டும் உப்பு.
செம்மை செய்வதற்குச் செப்பும் உப்பு. என்ன உப்பு?

46. மண்ணைக் கல்லே உடைக்கும் பாரை
மக்களில் சிலரிடம் இருக்கும் பாரை. என்ன பாரை?

47. பெண்கள் நகையாகப் போடும் குத்தி
ஆண்களுக்கு எந்நாளும் ஆகாக் குத்தி. என்ன குத்தி?

48. நாற்றமும் நரகலும் நிறைந்த தாரை
நாளும் சுத்தம் பண்ணவேண்டும் தாரை. என்ன தாரை?

49. இல்லம் நல்லபடிக்கான தளம் அல்ல,
இன்னிசைக்கு எப்போதும் இருக்கும் தளம். என்ன தளம்?

40. உடுப்பு மேலே போடும் அங்கி அல்ல,
உண்ண உதவும் ஓர் வித் அங்கி. என்ன அங்கி?

51: ஆண் பெண் போடும் ஆடை அல்ல,
பெண் பிள்ளைகள் மட்டும்போடும் ஆடை. என்னஆடை?

52. மரங்கள் செடிகள் மலிந்த காடு அல்ல
மக்கள் மனிதர் வாழும் மலை காடு. என்ன காடு ?

53. கயிற்றை எடுத்துப் போடும் முடி அல்ல,
கற்றையாய் எவரும் காணும் முடி. என்ன முடி?

54. நடக்கும் வழி நடுவில் உள்ளது காட்டி
நம்மவர்வழி தெரியச்சொல்லும் காட்டி. என்ன் காட்டி?

55. அடிக்கடி வண்ணான் ஆடையில் போடும் கறை அல்ல.
அப்பா அம்மா நம்மை வளர்க்க எடுத்த கறை:
என்ன கறை?

56. ஆனந்தப் பொழுது போக்கிற்குச் செல்லும்
ஆற்றங்கரை அல்ல,
அனுதினம் பருகும் பானத்திற்கான கரை. என்ன கரை?

57. மழை காலம் தண்ணீர் தேங்கும் குட்டை அல்ல,
மக்கள் கையில் தினம் வேண்டும் குட்டை,
என்ன குட்டை?

58. ஆனி மாதத்துக்கு அடுத்த மாதம் ஆடி அல்ல,
ஆரும் விரும்பாததை அலப்பும் ஆடி, என்ன ஆடி?

59. நீல நிறக் கடலிலே நீந்தி வரும் பல்
நீண்ட பயணம் செய்வோர் ஏறிச் செல்லும் பல்.
என்ன பல்?

60. வேஷம் போட்டு வேடிக்கைக்கு ஆடும் ஆட்டம் அல்ல
வெறுப்புக்கு விவரம் வேணடி ஆடும் ஆட்டம்.
என்ன ஆட்டம்?

61. நெற்றி வேர்வை நிலத்தில் விழ படும் பாடல்ல.
நேர்ந்த விபத்தை நேயருக்குச் சொல்லப் போடும்
பாடு. என்ன பாடு?

62. காடு கரை வயல் வெளியில் காணும் ஆடல்ல
கடலிலிருந்து வந்து காய்ந்த போன ஆடு. என்ன் ஆடு?

63. பல பேர் கூடி வாழும் நகரமல்ல
சிலபேர் ஏறிப் பார்க்கும் கரம். என்ன கரம்?

64. கல்வி அறிவு படைத்துப் பாடும் கவி அல்ல,
கலகலவென்று பலபேரைச் சிரிக்க வைக்கும் கவி.
என்ன கவி?

65. ஊருக்கு இடையிலே கடை இருந்த போதிலும்
எவரும் எட்டிப் பார்க்காத கடை. என்ன கடை?

66. பார்த்தவுடனே பலபேருக்கு வரும் பயமல்ல.
பாதுகாப்பும் பராமரிப்பும் கொடுக்கும் பயம்.
என்ன பயம்?

67. வீட்டிலே நாம் வளர்க்கும் நாயல்ல,
காட்டிலே கரடி புலியுடன் வாழும் நாய். என்ன நாய்?

68. செய்யத் தகாதவற்றைச் செய்து அடையும்
அவமானம் அல்ல,
செய்யும் சேவையைச் சீரும் சிறப்புமாய், செய்து
அடையும் மானம். என்ன மானம்?

69. தனக்கு மிஞ்சினவர் ஜகத்தில் இல்லை என்னும் பாவம்
தனிக் கொடி ராஜா என்று தலை கொழுத்த பாவம்.
என்ன பாவம்?

70. உழவர்கள் நிலம் உழுது கட்டும் பாத்தி அல்ல.
கிழவர்கள் ஜீரணிக்க செய்யப் பண்ணும் பாத்தி.
என்ன பாத்தி?

71. பத்துப்பேர் கூடிப் பண்ணும் குழம்பு என்னும் ஆணம்
அல்ல, பலபேர் உண்டு பரமானந்த விருந்து உண்ணும்
ஆணம். என்ன ஆணம்?

72. வேலை செய்யாத வீண் வெட்டி ஆள் அல்ல,
வேலையை வயலில் செய்ய் வேண்டிய வெட்டி.
என்ன வெட்டி?

73. மாடு எருமை போடும் சாணி அல்ல,
மனிதர் ஏறும் வண்டிக்கு வேண்டும் சாணி. என்ன சாணி

74. கோயில் குளம் போய்க் கும்பிடும் காளி அல்ல
குழம்பு கறி பதார்த்தத்திற்கு வேண்டும் காளி.
என்ன காளி?

75. வீர தீரமாய் மேடையில் பேசும் பேச்சாளி அல்ல,
வீட்டிற்குள் இரவில் திருடித் தின்னும் சாளி.
என்ன சாளி?

76. ஊராரை ஏமாற்றித் திரியும் வேஷதாரி அல்ல,
உள்ளதை உரியதைத் தொலைத்துவிட்டு
உட்கார்ந்திருக்கும் தாரி. என்ன தாரி?

77. கோடைகாலத்தில் குளிர்ச்சிக்குப்போகும் நீலகிரி அல்ல
கோஷ்டமும் கோரணியும் நடத்தும் கிரி. என்ன கிரி?

78. ஆதிகாலத்திலிருந்த "ஆளி" என்ற மிருகம் அல்ல,
நாதி அற்றவரை நன்ருய் ஆதரிக்கும் ஆளி. என்ன ஆளி?

79. நீதியாய் நியாயமாய் நகை செய்யும் ஆசாரி அல்ல,
நேர்மையாய்க் குடும்பத்தை நடத்தும் சாரி. என்ன சாரி

80 சுவரில் பொருளைத் தொங்க அடிக்கும் ஆணி அல்ல.
சுடச் சுட வாயில் போட்டு மெல்லும் ஆணி.
என்ன ஆணி?

81. செம்படவன் மீன் பிடிக்கும் வலை அல்ல,
செத்த பிணம் போல் தோற்றம் அளிக்கும் வலை.
என்ன வலை?

82. உணவோடு சேர்த்து உண்ணும் காய்
உப்பில் பலநாள் இருந்த காய். என்ன காய்?

83. கண்டதற்குக் கண் மூடிக் காசை செலவு செய்யும் கை
கொண்ட பொருளைக் கொண்டுபோய் அடகு வைக்கும்
கை. என்ன கை?

84. ஊறுகாய்க்கு ஊற்றும் காடி காடியல்ல
தேறும் பொருள் வாங்கத் தேடிச் சொல்லும்
காடி. என்ன காடி?

85. அந்நியருக்கு மக்களை அடிமை ஆக்கின் "ஆமை"
ஆபத்தை நாட்டில் கொண்டு வந்த "ஆமை".
என்ன ஆமை?

86. நாட்டிற்கு நலம் தேடி வைக்கும் பத்தி
நாள்தோறும் நல்வாழ்விற்கு அடி கோலும் பத்தி.
என்ன பத்தி?

87. இன்னலுடையவருக்கு ஈயும் கொடை
என்னலத்திலும் நன்னலக் கொடை என்ன கொடை?

88. எவருக்கும் எங்கும் எப்போதும் வேண்டும் கோள்
எது தவறினும் இது இருப்பவர் எப்படியும் முன்னேறும்
கோள். என்ன கோள்?

89. மற்றவர்களைத் தம் வசப்படுத்தச் செய்யும் வசியம் அல்ல,
ஒவ்வொருவருக்கும் எப்படியோ, எதனுலோ இருக்கும்
வசியம். என்ன வசியம்?

90. தம்மிடம் உள்ளதை ஊராருக்கு அறிவிக்கும் பரம்
தக்க பரம் இருந்தால் தழைக்கத் துணை செய்யும் பரம்;
என்ன பரம்?

91. ஓய்வு நேரத்தில் பெண்கள் உட்கார்ந்து
விளையாடும் தாயம் அல்ல, ஒற்றுமையாய் இருந்து
உயிர் வாழும் தாயம்; என்ன தாயம்?

92. காடு செடி கொடி செறிந்த வனம் அல்ல.
நாடும் பண்பாடுகளில் நல்லதொருவனம். என்ன வனம்?

93. எந்நேரமும் ஏதோ பேசும் வாய் அல்ல
நன்னிலைக்கு வழி காட்டும் வாய். என்ன வாய்?

94. மக்கள் மனம் மகிழப் பேசப் படைத்த மாளியும்
மற்றோரால் ஏமாற்றமடைந்து ஏமாந்து நிற்கும்
மாளியும் யார்.

95. அதிகமாய்ப் பேசினதைச் சுருக்கமாய்ச்
சொல்லும் சாரம் அல்ல,
அநேகர் தெரியும்படி பலவிடத்தும் போய்ப்
பேசும் சாரம். என்ன சாரம்?

96. சொல்லில் தப்புத் தவறுகளைத் திருத்தும் திருத்தமல்ல,
வாழ்க்கையின் தப்புத் தவறுகளைத் திருத்தும்
திருத்தம். என்ன திருத்தம்?

97. புதுவெள்ளம் வந்து புரண்டோடும் கலங்கல் ஆறு அல்ல,
மெதுவாக மனித சமுதாயத்தைக் குடி கெடுக்கும்
ஆறு. என்ன ஆறு?

98. உலகம் நாடும் பலவித தந்திரமல்ல,
உரிமையுடன் வாழ மக்கள் நாடும் தந்திரம். என்ன
தந்திரம்?

99. சமைக்கும் அரிசி வெந்ததைப் பார்க்கும் பதம் அல்ல,
அமைக்க எண்ணினதை அடையச் செய்யும் பதம்.
என்ன பதம்?

100. தூக்கம் வரும் நேரம் விரித்துப் படுக்கும் பாய் அல்ல
ஆக்கம் மிகுந்த அழகிய பாய், ஆரும் விரும்பும் பாய்.
என்ன பாய்?

# 5. சொற்கள்—எழுத்துக்கள்

1. மூன்றெழுத்தால் ஆனது முக்கியமான நகர்.
முதலெழுத்துக்குப் பொருள் பார்த்திரு என்பதாம்.
முதலெழுத்தும் மூன்றும் எழுத்தும் சேர்ந்தால்
இந்துக்களுக்குரிய மகா புண்ணியஸ்தலத்தின் பெயராம்
அந்த நகர் பேர் என்ன ?

2. மூன்று சொல்லால் ஆனது ஒரு மாவட்டப்பெயர்.
முதல் சொல்லுக்குப் பொருள், புனிதம். இரண்டாம்
சொல்லுக்கு உணவு தானியப் பெயராகும். மூன்றும்
சொல்லுக்குப் பொருள், பயிருக்குப் பாதுகாவலாக
உள்ளது எனப் பெயராம். அம்மாவட்டம் எது ?

3. மூன்றெழுத்துக் கொண்டது ஒரு முதலாளி மகன் பெயர்.
முதல் எழுத்தை எடுத்து விட்டால் மாலைக்குதவும்
ஒருமலர் பெயர். அவன் பெயர் என்ன ?

4. இரு சொல்லால் ஆனது ஒரு அறிவாளி பெயர்.
முதற் சொல்லை எடுத்தால் தமையனை அழைக்கும்
சொல்லாகும். இரண்டாம் சொல்லை எடுத்தால்
கணவனைக் குறிப்பிடும் பெயராகும். அப் பெயர்.
என்ன?

5. ஐந்தெழுத்துக் கூடி ஆனது ஒரு தேசப் பெயர்.
ஐந்தெழுத்தில் முதல் மூன்றும் அரியதோர்
மொழியாகும். பின்னது இரண்டால் பிறக்கும்
ஒரு தேசமாம். அது என்ன ?

6. மூன்று சொல் கொண்டது ஒரு முனிவர் வாழ்ந்த மலை
முதற் சொல்லுக்கு சுமை என்று சொல்லலாம்.
இரண்டாம் சொல்லுக்கு உடலில் ஒரு உறுப்பென
பொருள் பெறும். மூன்றும் சொல் பருவதம் எனப்
பகர்வர் அறிஞர். இம்மலைப் பெயர் என்ன ?

7. இரு சொல்லால் இணைந்தது ஓர் ஊர்.
முதற் சொல் எடுத்தால் முன் கால ஜாதியார்.
பின் சொல் எடுத்தால் பிரியமாய் செல்லுமிடம்.
பிரிக்கத் தெரிந்தால் விரிக்க வருவீர்.

8. மூன்றெழுத்துக் கொண்டது ஒரு முக்கிய நகரம்.
இரண்டாம் மூன்றும் எழுத்தும் முதல்வர் எனப்
பொருள்படும். முதலாம் இரண்டாம் எழுத்தும்
சேர்ந்தால் போதை தரும் பானமாகும். அது என்ன ?

9. ஐந்தெழுத்தால் ஆனது அருமைத் தின்பண்டம். முதல் இரண்டு எழுத்துக்கள் அநேகம் என்பதாம். மூன்றும் நாலாம் ஐந்தாம் எழுத்துக்கள் நாம் விரும்பாத ஒரு ருசிக்குப் பெயர். முதல் எழுத்தும் நாலாம் ஐந்தாம் எழுத்துக் கூட்டினால் மோட்சம் எனப் பொருள்படும் முதலாம் இரண்டாம் ஐந்தாம் எழுத்துக் கூட்டினால் நமக்கு என்றும் வேண்டிய தேக நிலையாம். அச் சொல் யாது?

10. ஐந்தெழுத்துக் கொண்டது ஒரு அருமையான குணம். முதல் இரண்டெழுத்தும் ஒரு தமிழ் ஆண்டின் பெயர். மூன்றும் நாலாம் ஐந்தாம் எழுத்துக்கள் மணம் எனப் பொருள்படும். ஐந்தெழுத்தில் முதல் எழுத்து எடுத்து விட்டால் நாம் ஒவ்வொரு விஞடியும் செய்யும் செயலாகும். நாலாம் ஐந்தாம் எழுத்தும் கூடினால் நிரம்ப என்னும் பொருள்படும் உபசர்க்கம். அந்தக் குணத்தின் பெயர் கூறு?

11. மூன்று சொல்லாலானது ஒரு முக்கிய ஸ்தலம். முதற் சொல்லுக்குத் தூய்மை எனப் பொருள். இரண்டாம் சொல்லைத் தமையனை விளிக்கும் சொல். மூன்றும் சொல்லுக்குச் சிகரமுடைய பெருங்குன்று எனவும் பொருள் ஆகும். அந்த ஸ்தலப் பெயர் என்ன?

12. நாலெழுத்தால் ஆனது நமக்கு பிரயாணத்துக்கு வேண்டுவது. முதலெழுத்தை நீக்கினால் பளுவு எனப் பொருள்படும். இரண்டாம் எழுத்தை நீக்கினால் உலகின் பரப்பை மூடியுள்ளதன் பொருளாகும். அதன் பெயர் என்ன?

13. நாலெழுத்துக் கொண்டது நமக்கு மேல் உள்ளது. முதலெழுத்து மட்டும் பசு எனப் பொருள் படும். முதலெழுத்தை நீக்கி விட்டால் மிளகு ரசத்துக்கு மிகத் தேவைப் பொருளாகும். இது என்ன?

14. நாலெழுத்தைக் கொண்டது ஒரு மிருகத்து நாசி ஆகும். முதலிரண்டெழுத்தும் போற்று என்னும் பொருள்படும். கடைசி எழுத்து நம் உறுப்பின் ஒன்றன் பெயராகும். அது என்ன?

15. மூன்று சொல் சேர்ந்து முக்கிய புண்ணிய ஸ்தலப் பெயராகும், முதற் சொல்லுக்குப் புனிதம் எனப் பொருள். இரண்டாம் சொல் தெய்வக் குடியிருப்பு

என்பதாகும். மூன்றும் சொல் மக்கள் குடியிருப்பு எனப் பெயர்பெறும். அதன் பெயர் என்ன ?

16. ஆறெழுத்தால் ஆனது பகல் பொழுதின் காலத்தைக் காட்டும். முதல் மூன்று எழுத்துக்கள் நடு என்று பொருள்படும். முதல் இரண்டு எழுத்துக்களை நீக்கி விட்டால் சிந்தனை என்ற பொருள் தரும். அப்பகல் பொழுது எது ?

17. நாலெழுத்துச் சேர்ந்து மக்கள் நிலை தெரிவிக்கும் ஒரு சாஸ்திரப் பெயராகும். முதல் இரண்டு எழுத்துக்கள் 'ஒளி' எனப் பொருளாகும். முதல் எழுத்தை மட்டும் நீக்கினால் திடம் எனப் பொருள்தரும்.
அந்தச் சாஸ்திரம் எது ?

18. இரு சொல் கொண்டது ஒரு நகர் பெயர்.
முதற் சொல் திருமணமாகாத பெண்ணைக் குறிக்கும். இரண்டாம் சொல் ஒரு வாலிப இளமங்கையைக் காட்டும். இரு சொல்லுக்கும் இடையில் கேள்விக்குரிய ஒரு இடைச் சொல் உண்டு. இந்நகர் பெயர் என்ன ?

19. ஐந்தெழுத்தாலான ஒரு சொல்லுக்கு ஆத்திரம், சீக்கிரம், என்று பொருள்படும். முதற் சொல் எதிரிடைக்கு எப்போதும் சேர்த்துக் கூறும் சொல்லாகும். இரண்டாம் சொல் பெண்கள் கழுத்திலணியும் ஒரு நகைக்குப் பெயராகும். இச்சொல் யாது ?

20. ஐந்தெழுத்துக் கொண்டது ஒருவர் தொழில் துறைப் பெயராகும். அந்தப் பெயரை இடது புறமிருந்து வாசித்தாலும், வலது புறம் தொடங்கி இடது புறமாக வாசித்தாலும் பொருள் மாறாது சொல்லும் மாறாது. அந்தப் பெயர் என்ன ?

21. மூன்றெழுத்தைக் கொண்டது ஒரு சிறு இந்திய நாட்டின் பெயர். இதனை முதல் தொடங்கி வாசித்தாலும் பின் தொடங்கி முன்னோக்கி வாசித்தாலும் பெயர் மாறாது, அப்பெயர் எது ?

22. இரு சொல்லால், நாலெழுத்தால் ஆனது ஒரு இன்பப் பொழுது போக்கு வேலை.
முதல் சொல் போகச் செய் எனப் பொருள் படும்.
இரண்டாம் சொல் சிறுவர் எந்நேரமும் பாட்டியைச் சொல்லச் சொல்லிக் கேட்பது.
முதல் எழுத்தும் கடைசி எழுத்தும் சேர்ந்தால்

நிலத்தில் ஊன்ற முளை உண்டாகும் பொருள்.

இது என்ன?

23. முதல் இரண்டு எழுத்துக்கள் "ஒன்சேர்" என்ற பொருள் தரும்.
மூன்றும் நான்காம் ஐந்தாம் எழுத்துக்கள் சேர்ந்தால்
கடவுள் நமக்கு இது தர வேண்டும் என்று மன்றாடுவோம்.
முதல் இரண்டெழுத்தும் கடைசி எழுத்தும் கூடினால்
பாத்திரம் எனப்பொருளாகும். அச் சொல்யாது.

24. நாலெழுத்துக் கொண்டது
சிலர் வீட்டில் வளர்க்கப்படும் ஒரு பறவைக்குப்
பெயராகும். முதல் எழுத்துச்சிறுவரை அழைக்கும்சொல்
முதலும் இரண்டும் சேர்ந்து ஆகாயத்தைக் குறிக்கும்.
மூன்றும் நான்காம் எழுத்துக்கள் பலர் வீட்டில் வளர்க்கும்
பறவைக்குப் பெயராகும். முதல் எழுத்தும் கடை
எழுத்தும் ஒரு வாழ்த்துச் சொல்லாகும். அப்பறவைப்
பெயர் என்ன?

25. இரு சொல் கொண்டது இந்துக்கள் என்றும்
சென்று தெய்வ வழிபாடு செய்யும் ஒரு ஸ்தலம்.
முதற்சொல், செல்வம் மங்களம், எனப் பொருள் படும்.
இரண்டாம் சொல் ஊர், நகர் என்ற பொருளாகும்.
இச்சொல் ஐந்தெழுத்தாலானது.
அதில் நான்காம் எழுத்தை நீக்கி வாசித்தால்
நிம்மதி, சரிபட்ட நிலை. என்பதை உணர்த்தும்
சொல்லாகும். அந்த ஸ்தலப்பெயர் என்ன.

26. நாலெழுத்து சொல், நல்லபொருள் பெயர்.
ஒவ்வொருவருக்கும் உரியது இது.
முதல் எழுத்தை எடுத்து விட்டால் ஆஸ்தி எனப்
பொருள்படும். இரண்டாம் எழுத்தை நீக்கி விட்டால்
காடு என்றாகும். இப்பொருள் எது.

27. மூன்றெழுத்துக் கொண்டது ஒரு சிறு நீதி நூல்.
முதலெழுத்துமட்டும் வயதானதைக் காட்டும்.
இரண்டாம் மூன்றும் எழுத்துச் சேர்ந்தால் கணவான்
எனப் பொருள் படும். அச்சொல் யாது.

28. இரு சொல் கொண்டது இளைஞர் நீதி நூல்.
முதல் சொல் இந்தப் பூமியையும் இரண்டாம் சொல்
அறநெறியையும் அறிவிக்கும். அந்நூல் பெயர் என்ன.

29. இரு சொல்லாலானது இலக்கிய நூலொன்று.
முதல் சொல் இரத்தினம் என்றும், இரண்டாம்

சொல் மாதர் இடையில் அணியும் ஆபரணம்.
எனவும் பொருள்படும். இந்நூலின் கடைசி இரு
இரு எழுத்துகளும் வித்தை எனச் சொல்லப்படும்.
முதலும் கடைசி எழுத்தும் சேர்ந்தால் பருவதம் ஆகும்.
அந்நூல் யாது.

30. மூன்று எழுத்துக் கொண்டது ஒரு கடவுள் பெயர்.
முதலெழுத்து, அரசன், பசு, என்றும்
இரண்டாம் மூன்றும் எழுத்து சேர்ந்தது
உடலிலிருந்து வரும் உணவுப் பொருள் எனப்
பொருள் படும். இப்பெயர் என்ன.

31. ஆறெழுத்துக் கொண்டது அரிய ஒரு
விலையேறப்பெற்ற கல். முதல் இரண்டும்
நாலாம் எழுத்தும் மிக அழகிய ஒரு
தெய்வ மகனைக் குறிக்கும். நாலாம் ஐந்தாம்
ஆறும் எழுத்துக்கள் சேர்ந்தால் ஒரு
நாளைக் குறிக்கும். அப்பெயர் என்ன.

32. நாலெழுத்தாலானது ஒரு நாளின் பெயர்.
அது நம் உடலின் உறுப்பின் ஒரு அழகுடைய
உறுப்பு, என்று பொருள்படும். முதலும் கடைசி
எழுத்தும் சேர்ந்தால் காரியத்தை முடி.
என்கிற கட்டளைச் சொல்லாகும்.
அதன் பெயர் என்ன.

33. மூன்றெழுத்துக் கூடியது ஒரு அழகான மலர் பெயர்.
முதல் எழுத்துக் கொடு என்வும்;
முதலும் கடைசியும் சேர்ந்தால் காலடி
எனப் பொருளாகும். இரண்டாம் மூன்றும்
எழுத்துகள் சேர்ந்தால் 'மான்" எனப் பொருளாகும்;
அம்மலர் பெயர் என்ன.

34. நாலெழுத்துச் சேர்ந்தது, நங்கையர்
தினமும் தலையில் வைக்க தேடும் ஒரு மலர் பெயா.
கடைசி எழுத்தை எடுத்து விட்டால்
குழம்புக்குத் தேவைப்படும் ஒரு பொருளாகும்.
கடைசி எழுத்து மட்டும் நம் உறுப்புகளில்
ஒன்றன் பெயராகும். அம்மலர் பெயர் என்ன?

35. மூன்றெழுத்துக் கொண்டது ஒரு கனியின் பெயர்.
முதல் எழுத்து நாம் வெறுப்பைக் காட்டக்
கூறும் ஒரு இடைச்சொல்.

முதலும் மூன்றும் எழுத்தும் கூடினால்
பெண்களுள் பலபேருக்கு வைக்கப்படும்
பெயராகும். அக்கனிபேர் என்ன?

36. இரத்தினக்கற்களில் ஒன்று ஐந்தெழுத்தைக்கொண்டது.
முதல் இரண்டும் கடைசி எழுத்தும்
ஒரு தருவைக் குறிக்கும். மூன்றும்
நாலாம் ஐந்தாம் எழுத்துக்கள் கோபத்தைக் காட்டும்.
பெண் பிள்ளைகளுக்கு அநேகருக்கு இப்பெயர்
வைக்கிறார்கள். அந்த இரத்தினக் கல் பேர் என்ன,

37. நாலெழுத்து கொண்டவன் நல்ல தொழிலாளி.
முதலிரு எழுத்துக்கள் வெள்ளைக்கு
எதிர்மறைச் சொல்லாகும், மூன்றும்
நாலும் சேர்ந்து காட்டில் உள்ள ஒரு மிருகம்.
பெயர் ஆகும். அத்தொழிலாளி யார் ?

38. நாணயத்திலெல்லாம் சிறு நாணயம்
நாலெழுத்தாலானது. முதல் மூன்று
எழுத்துக்கள் இளையவனைக் குறிக்கும்.
முதலும் கடையும் ஒரு கோலைக் காட்டும்.
மூன்றும் நாலும் சேர்ந்து கையினால் பற்று
எனப்பொருள்படும், அந்த நாணயம் பேர் என்ன.

39. ஒரு பெண் பெயர் ஐந்தெழுத்தாலானது.
முதலெழுத்து உயிர்விடு எனப் பொருளாகும்.
முதல் இரண்டும் இடுப்பில் எப்போதும் இருக்கும்
சிறு இரும்புக் குச்சிகள். கடைசி இரண்டு
எழுத்துக்களும் விளக்குக்கு வேண்டிய ஒரு பொருள்.
அந்தப் பெண் பெயர் என்ன?

40. மூன்றெழுத்தாலானது நம் வீட்டில் பயிர்
செய்யும் ஒரு செடி. முதலிரு எழுத்துக்கள்
எதிரிடைக்குச் சேர்க்கும் சொல். முதலும்
மூன்றும் சேர்ந்து பாதி எனப் பொருளாகும்.
இரண்டும் மூன்றும் படம் போடு எனப் பொருள் தரும்
அந்தச் செடி பெயர் என்ன?

41. மிருகங்களுள் மனிதனுக்கு மிகவும்
உபயோகமான மிருகம் ஒன்று: அதன்
பெயருக்கு மூன்றெழுத்துக்கள் வேண்டும்.
முதல் இரண்டு எழுத்துக்கள் கீழே தாவு
என்ற பொருள் படும். இரண்டும் மூன்றும்
சேர்ந்து ஜன்னல் கதவுகளில் காணும் பொருளாகும்.

முதலும் கடையும் நாயின் சத்தத்தைக் காட்டும். அம்மிருகம் பெயர் என்ன?

42. ஆற்றங்கரையோரம் அதிகம் காணும் மிருகம் ஒன்று: மூன்றெழுத்துக் கொண்டது அதன் பெயர். முதலும் கடையும் சேர்ந்து பிள்ளைகள் கேட்க அதிகம் பிரியப்படுவது. முதலும் இரண்டும் கொலைகாரருக்குரிய தண்டனையாகும். இதன் பேர் என்ன?

43. மூன்றெழுத்தால் ஆனது. ஒரு மரத்தின் பெயர். முதலெழுத்து நம் உறுப்பில் ஒன்று. முதலும் கடையும் ஒரு எண்ணாகும் இரண்டும் மூன்றும் சேர்ந்து சக்தி என்ற பொருளைத் தரும். அம்மரம் பெயர் என்ன?

44. குருமார் செய்யும் தொழிலில் ஒன்றுக்குப் பெயர் இது. நாலெழுத்தாலானது. முதல் எழுத்து ஒருவனைச் செல் எனக் கட்டளையிடும் செல்லாகும். இரண்டாம் எழுத்தை எடுத்து விட்டால் மிக்க இன்ப நிலை காட்டும் சொல்லாகும். இத்தொழில் பெயர் என்ன?

45. தஞ்சம் புக எண்ணுபவருக்குத் தெரியும் இச்சொல். இரு சொல் கூடியது. ஆறெழுத்தால் ஆனது. முதற்சொல், மூடு என்று பொருள்படும். இரண்டாம் சொல் பாத்திரம் எனப் பொருள்படும், இரண்டாம் மூன்றும் எழுத்தை நீக்கினால் விரிவு எனப் பொருளாகும், இச்சொல் எது. கிறிஸ்தவ மக்களுக்கு இச்சொல் ஒரு பெயராகும்.

46. இரு சொல் கொண்டது ஒரு பூச்சியின் பெயர். முதற்சொல் தறி, துண்டு பண்ணு என்னும் பொருள் தரும், இரண்டாம் சொல் மக்கள் வீட்டில் பிரியமாய் வளர்க்கும் ஒரு பறவையின் பெயர். அந்தப் பூச்சியின் பெயர் என்ன?

47. ஐந்தெழுத்துக் கொண்டது ஒருசொல். நற்செய்தி என்று பொருள்படும். முதல் எழுத்தை நீக்கினால் சங்கதி, முக்கிய காரியம், எனப் பொருள்படும். முதல் இரு எழுத்துக்களை நீக்கினால் மிதம் எனப் பொருளாகும். அச்சொல் யாது?

48. நாலெழுத்தால் ஆனது. நம் கண்ணுக்கு எட்டாத தூரத்திலுள்ளது. முதலெழுத்து ஆச்சரியத்தைக் காட்டும். இரண்டாம் எழுத்து மூன்றும் எழுத்து, நான்காம் எழுத்து சேர்த்தால் ரசத்துக்கான ஒரு பொருள் பெயர் ஆகும். இரண்டாம் எழுத்தை எடுத்து விட்டால் "வரி" எனப் பொருள் தரும். அதன் பெயர் என்ன?

49. நாலெழுத்தில் மனிதர் சமைத்து உண்ணும் பொருள்களில் ஒன்றன் பெயர், முதல் இரண்டும் கடவுள் எனப் பொருள்படும். இரண்டாம் எழுத்தை எடுத்து விட்டால், ஆசைப்படு, விரும்பு, எனப் பொருளாகும். அவ்வுணவுப் பெயர் என்ன?

50. மக்கள்; நாலெழுத்தால் ஆன மிருகத்தின் இதனைச் சாப்பிடுவர். முதல் எழுத்து "பெரிய" எனப் பொருள்படும். முதலாம் இரண்டாம் எழுத்துக்கள் மனைவியால் வந்த ஒரு அம்மாளைக் குறிப்பிடும். இரண்டாம் எழுத்தை எழுத்தை எடுத்து விட்டால் இதன் கடைசியில் சம்பளம் வரக் காத்திருப்போம். இது என்ன?

# 1. புதுமைப் புதிர் : விடைகள்

1. கண் கண்ணாடி
2. விசிறி
3. சந்திரன்
4. நட்சத்திரம்
5. சீத்தாப் பழம்
6. தோசை
7. இலட்டு
8. முறுக்கு
9. மைசூர் பாகு
10. தொப்பி
11. மழை
12. காற்று
13. முலாம் பழம்
14. இலவம் பஞ்சு
15. எருக்கலை
16. பலாப் பழம்
17. வெள்ளரிக் காய்
18. வாழை மரம்
19. சேவல்
20. பல்லி
21. வாழைக் காய், வாழைப் பழம்
22. நரி
23. பூவரசு
24. கதவு
25. கர்ப்பக் குழந்தை
26. பீர்க்கன் காய்
27. வெண்கலம்
28. வாரச் சந்தை
29. நாசித் துவாரம்
30. ஆகாய விமானம்
31. ஆலம் விழுது
32. ஆட்டுக் கல்
33. தண்ணீர்
34. கை விரல்கள்
35. சப்பாத்துக் கள்ளி
36. கடல்
37. திராட்சை
38. தபால் பெட்டி
39. ஐஸ் கட்டி
40. தலை முடி
41. விண் மீன்
42. பள்ளிக் கூடம்
43. குடை
44. எச்சிலை
45. கை விரல்கள்
46. நகம்
47. முருங்கைக் காய்
48. வாழை மரம்
49. உப்பு, செருப்பு, நெருப்பு
50. பட்டுப் பூச்சி
51. சுத்தாழை
52. அவரைக் காய்
53. மிளகாய்ப் பழம்
54. பெருச்சாளி
55. தேன்
56. நாக்கு
57. காதுகள்
58. கண்கள்
59. மனித உருவம்
60. சுண்ணாம்பு, வெற்றிலை பாக்குத்தூள்
61. வெள்ளரிக் காய்
62. நாக்கு
63. சோப்பு முட்டை
64. வாழைப் பழம்
65. எலி: திருடன்
66. எஜமான், கருமான் புத்திமான்
67. யானை
68. ஆலமரம்
69. வயிறு
70. கண்கள்
71. வாத்து
72. தக்காளிப் பழம்
73. பூசணிக் காய்
74. மக்கள் : திருடர்
75. தக்காளிப் பழம்

76. நட்சத்திரம்
77. பருப்பு மத்து
78. ஒருவர் நிழல்
79. காற்று
80. ஐஸ் கட்டி
81. நாயும், பூனையும்
82. வெற்றிலை
83. தண்ணீர்
84. கத்தரிக் காய்
85. பூசணிக் காய்
86. தற்பூசணிப் பழம்
87. நாக்கு
88. மூட்டைப் பூச்சி
89. பாம்பு
90. ஊமத்தன் செடி
91. பேனு
92. மிளகாய்ப் பழம்
93. பன்றி
94. காற்று
95. மாங்கனி
96. வாழை மரம்
97. புளியம் பழம்
98. பட்டாசு வெடித்தல்
99. மண் அடுப்பு
100. நெருப்பு
101. நாம் அணியும் சட்டை
102. நாக்கு
103. சுரைக் காய்
104. பூசணிப் பழம்
105. சீதாப் பழம்
106. நீல வானம்
107. பாம்பு
108. புல் தரை
109. அவரைச் செடி
110. இலந்தைப் பழம்
111. தவளை
112. தூக்கணாங் குருவிக் கூடு
113. சதுரக் கள்ளிப் பால்
114. பெருச்சாளி
115. இளநீர்
116. ஆல், அரசு, பழங்கள்
117. பீர்க்கன் காய்
118. மக்காச் சோளம்
119. பாவற்காய்
120. முட்டை
121. கண்ணிமை முடி
122. கொசுகு
123. குயவன், சட்டி, பானை, தட்டுதல்
124. பற்கள்
125. எலுமிச்சம் பழம்
126. தேங்காய்
127. கீரை
128. மாவிலை
129. ஊமத்தங் காய்
130. வெண்டைக் காய்
131. புஸ்தகம்
132. வாய்
133. சாத்துக்குடி ஆரஞ்சு
134. சிறுகீரை
135. குன்றுமணி
136. பனம் பழம்
137. ஆட்டுக் கடா
138. வாழைமரம்
139. சேவல்
140. வாத்து
141. புழுக் கொத்தி
142. வானம்
143. வெள்ளைப் பூண்டு
144. வெங்காயம்
145. ஏணி
146. தோணி
147. பஸ் கண்டக்டர்
148. மீன்
149. பனைமரம்
150. காகம்
151. தேனீக்கள்
152. குளவிக் கல்
153. நெருப்பு

154. காப்பி, டீ
155. பென்சில்
156. மனித மூளை
157. வாழை மரம்
158. மலை
159. ஆறு
160. உண்மை
161. அன்பு
162. அடுப்புக்கரி; அக்கினித் தழல்
163. நெருப்பு
164. காகம்
165. இருதயம்
166. மழை
167. மாம்பழம்
168. கொய்யாப் பழம்
169. உழவுத் தொழில்
170. நிலக்கரி
171. முலாம் பழம்
172. விளாம் பழம்
173. தலை முடி
174. தினப் பத்திரிகை
175. வெண்ணெய்
176. ஆலமரம்
177. பனைமரம்
178. பசும் பால்
179. இருதயம்
180. பேனு
181. புஸ்தகம்
182. சூரியன் = ஞாயிறு. சந்திரன் = திங்கள் கிழமைகள் அடுத்தடுத்திருக்கிறது.
183. ஞாயிறு முதல் சனி முடிய உள்ள நாட்கள்
184. சந்தனக் கட்டை
185. வேர்க் கடலை
186. உப்புமா
187. இட்டிலி
188. தங்கம்
189. முறுக்கு
190. பொரி
191. தோசை
192. வேப்பங் கொட்டை
193. கரடி
194. பன்றி
195. சிட்டுக் குருவி
196. காப்பி
197. தேயிலை
198. பம்பிளிமாஸ் பழம்
199. தாழம்பூ
200. வாத நாராயணன் மரம்
201. பூவரசு
202. பேரீச்சம் பழம்
203. மோட்டார் வண்டி
204. குரங்கு
205. மாம்பழம்
206. மல்லிகை
207. அணில் பிள்ளை
208. பால் கறத்தல்
209. கொக்கு
210. தேர் இழுத்தல்
211. சவுக்கு மரம்
212. புஸ்தகம்
213. குரங்கு
214. அப்பளம்
215. செம்மறி ஆடுகள்
216. அகப்பை
217. கண் விழி; கண் இமை;
218. நாக்கு
219. கை விரல்கள்
220. தலை முடி
221. எலிப் பொறி
222. சர்க்கரை வள்ளிக் கிழங்கு
223. விளக்கு எரிதல்
224. மூக்கு
225. கண்மூடிகள்
226. பன்றி
227. வெள்ளாடு

228. செம்மறி ஆடு
229. எருமை
230. பசுமாடு
231- கழுதை
232. காற்றுடி
233. பூனை
234. எலி
235. நாய்
236. குதிரை
237. அணில்
238. குரங்கு
239. முயல்
240. கீரி
241. நரி
242. புலி
243. கரடி
244. கழுகு
245. சேவல்
246. தலைமுடி, பேன்
247. சேவல்
248. காகம்
249. வாத்து
250. கொண்டலாத்தி
251. குயில்
252. மயில்
253. சிட்டுக் குருவி
224. புறுக்கள்
255. கிளிப் பிள்ளை
256. மான்கள்
257. நத்தை
258. மூக்காடு
259. தாமரை இலை
260. கரும்பு
261. எலுமிச்சங் கனி
262. தேங்காய்
263. கோழிக் குஞ்சு
264. மீன் இரை தின்பது
265. நெற்றி
266. சோளப் பொரி
267. வெங்காயம்
268. தலை முடி
269. சுரைக் காய்
270. மாதுளம் பழம்
271. மத்தளம்
272. எலுமிச்சங் கனி
273. ஆகாய விமானம்
274. மக்காச் சோளம்
275. மூட்டைப் பூச்சி
276. நகம் வெட்டி
277. ஊசி
278. கடிகாரம்
279. பேனு
280. மின்சாரம்
281. உதை பந்து
282. ஒட்டகம்
283. குயில்
284. வெங்காயம்
285. தூக்கணாங் குருவிக் கூடு
286. காக்கைக் கூடு
287. மேகம்
288. அரிவாள்
289. பூ
290. வாய், நகை (சிரிப்பு)
291. சீதேவி; மூதேவி
292. மிளகாய்
293. நாற்காலி
294. மழை
295. மண் பாண்டங்கள்
296. கரும்பு
297. உப்பு
298. எழுத்தாணி
299. எலிப் பொறி
300. காப்பி, பலகாரக் கடை
301. கண்ணாடி
302. போஸ்ட் கார்ட்
303. ஈ
304. கண்- 2. பத்து பேர்-10
விரல்கள் 32பேர் - 32பற்கள்

305. இளநீர்
306. தேசியக் கொடி
307. புகை
308. உடுக்கை
309. உமிழ் நீர்
310. நெருப்புத் தழல்-கரி
311. கரும்பு
312. கடிகாரம்
313. குயவன், சட்டி, பானைகள்
314. விளக்கு
315. ரேடியோ
316. பருப்பு மத்து
317. தவளை
318. கீரி
319. மூங்கில்
320. கூட்டுப் பறவை
321. வானவில்
322. இளநீர், கடல்நீர்
323. மாடு
324. காற்றாடி
325. கழுதை, வண்ணான், தடி

## 2. யார் இவர்கள் புதிர்கள்: விடைகள்

1. உழவர்
2. தென்னாலி இராமன்
3. N. S. கிருஷ்ணன்
4. கடவுள்
5. நந்தனார்
6. இராமலிங்க அடிகள்
7. ஈ.வே. இராமசாமிப் பெரியார்
8. சுப்ரமண்ய பாரதியார்
9. திருவள்ளுவர்
10. ஜவஹர்லால் நேரு
11. புத்தர்
12. அறிஞர் அண்ணாத்துரை
13. திருவள்ளுவர்
14. இயேசு கிறிஸ்து
15. மகாத்துமா காந்தி
16. மாமேதை இராஜ கோபாலாச்சாரியார்
17. விநோபாஜி பாபுஜி
18. இராஜராம் மோகன்ராய்
19. மறைத்திரு பாப்லி துரைமகனார்
20. வீரமா முனிவர்
21. ஔவை
22. கண்ணகி
23. ஹெலன் கெல்லர்
24. திரு K. காமராஜ்
25. இந்திரா காந்தி

## 3. ஏன்? எதனால்? புதிர்கள்: விடைகள்

1. களையால்
2. கனத்தால்
3. பெருங்காயத்தால்
4. கூட்டால்
5. மூட்டையால்
6. மணியால்
7. பெண்ணால்
8. காலால்
9. குடியால்
10. எடுப்பாரில்லாமையால்
11. கால்இல்லாமல்
12. மழையினால்
13. முறுக்கினால்
14. குட்டினால்
15. பாட்டால்
16. அடியால்
17. மணத்தால்
18. படியால்

19. உப்பால்
20. நகையால்
21. வட்டியால்
22. விளக்கினால்
23. மணியால்
24. எண்ணினால்
25. ஓலையால்
26. தீனியால்
27. நூலால்
28. பழுத்தால்
29. பணத்தால்
30. ஐந்து பெண் பிறந்தால்
31. படையினால்
32. கூட்டால்
33. கொடியால்
34. அறிவால்
35. அன்பினால்
36. நடையினால்
37. கல்வியால்
38. உம் சேவையால்
39. கையில் காசு இல்லாததால்
40. உண்மை பேசுவதினால்
41. உரத்தால்
42. சூட்டினால்
43. பிரியத்தால்
44. மன வருத்தத்தால்
45. தட்டினால்
46. உழைப்பினால்
47. முயற்சியால்
48. சகவாசத்தால்
49. பாகப்பிரிவினையால்
50. பொறுமை
51. புத்தியீனத்தால்
52. அயோக்கியத் தனத்தால்
53. மக்கள் குடியேற்றத்தால்
54. பசியால்
55. பணமுடையால்
56. ஒற்றுமை இன்மையால்
57. புகழுடம்பு பெற்றதால்
58. ஒத்த மனப் பான்மையால்
59. ஒழுக்கத்தால்
60. பண்பாட்டால்
61. எண்ணெயால்
62. பயிற்சியால்
63. சூரியனால்
64. அக்காளை மணந்ததால்
65. அவன் பெருந்தன்மையால்
66. குடும்ப வாழ்க்கையால்
67. வாசக நூலால்
68. மணியால்
69. கண்
70. கவலையால்
71. குடியால்
72. விளைவால்
73. ஒருவன்பேச்சில் அறியலாம்
74. கவனிப்பார் இல்லாததால்
75. முன் யோசனை இல்லாததால்
76. முதுமையால்
77. பாட்டால்
78. வரவால்
79. பனியால்
80. மாலையால்
81. விசிறியினால்
82. உச்சரிப்பினால்
83. வேலியினால்
84. முறுக்கால்
85. நீராவியால்
86. பல்லால்
87. அம்பால்
88. காய்ச்சலால்
89. மூட்டையால்
90. திருட்டினால்
91. கூடையால்
92. கை ரேகையால்
93. வேக்காட்டால்
94. பால்
95. உதையால்

96. அடிக்கடி செல்வதால்
97. குடி போதையால்
98. திரு விழாவால்
99. பசியால்
100. உப்பால்
101. மக்களால்
102. கஞ்சியால்
103. நாக்கால்
104. துணிவால்
105. புத்தி சுவாதீனம் இன்மையால்
106. சரித்திரத்தால்
107. தூண்டுதலால்
108. கை பட்டால்
109. சவுக்கினுல்
110. மன்குட்டினுல்
111. பழரசத்தால்
112. களைப்பால்
113. எண்ணெயால்
114. உரிமையால்
115. புகையினுல்
116. ஊட்டத்தால்
117. அழுக்கால்
118. தூக்கம் கெட்டதால்
119. கடன் தீர்க்கவும் ஆடைகை கட்டவும், வழி இல்லாமையால்
120. கற்களால்
121. சூரியனுல்
122. மேகத்தால்
123. உளியால்
124. கண்களால்
125. மகாத்மா காந்தி

## 4. என்ன? புதிர்கள் : விடைகள்

1. அகங்காரம்
2. கோபக் குணம்
3. பொறுமை
4. அவசரம்
5. சர்க்கரை
6. படுக்கை
7. வெங்காயம்
8. காமாலை
9. உலக்கை
10. சமாதானம்
11. கலவரம்
12. நிதானம்
13. வறுமை
14. அகப்பை
15. பொங்கல்
16. உப்பு
17. அவசரம்
18. அகங்காரம்
19. உபகாரம்
20 அபகாரம்
21. ஆபத்து
22. விபத்து
23. கற்கண்டு
24. துப்பட்டி
25. அரிவாள்
26. சும்மா
27. அம்மா
28. சும்மாடு
29. காமாலை
30. தோசை
31. காக்காய்
32. வெங்காயம்
33. முருங்கைக் காய்
34. ஆட்டுக்கல்
35. அம்மணம். திருமணம்
36. புறக் கடை
37. தலையணை
38. சித்திரை
39. மந்திரி
40. துப்பாக்கி
41. பள்ளிக் கூடம்
42. சம்மட்டி
43. வைக்கோல்
44. மசாலை
45. மன்னிப்பு
46. கடப்பாரை
47. மூக்குத்தி
48. ஜலதாரை
49. மத்தளம்
50. முள்ளங்கி
51. பாவாடை
52. ஏற்காடு
53. தலைமுடி
54. கை காட்டி
55. அக்கறை
56. சர்க்கரை

57. கைக்குட்டை
58. வாயாடி
59. கப்பல்
60. ஆர்ப்பாட்டம்
61. கூப்பாடு
62. கருவாடு
63. சிகரம்
64. விகட்கவி
65. சாக்கடை
66. அபயம்
67. ஓளுய்
68. வெகுமானம்
69. அகம்பாவம்
70. சப்பாத்தி
71. கலியாணம்
72. மண்வெட்டி
73. அச்சாணி
74. தக்காளி
75. பெருச்சாளி
76. ஊதாரி
77. போக்கிரி
78. கொடையாளி
79. சமுசாரி
80. பட்டாணி
81. கவலை
82. ஊறுகாய்
83. வெறுங்கை
84. அங்காடி
85. தீண்டாமை
86. உற்பத்தி
87. நன்கொடை
88. குறிக்கோள்
89. அவசியம்
90. விளம்பரம்
91. சமுதாயம்
92. கவனம்
93. வருவாய்
94. கோமாளி; ஏமாளி
95. பிரச்சாரம்
96. சீர்திருத்தம்
97. அழுக்காறு (பொறாமை)
98. சுதந்திரம்
99. சபதம்
100. பம்பாய்

# 5. சொற்கள்: எழுத்துக்கள்: புதிர்கள்

1. காஞ்சி
2. திருநெல்வேலி
3. சரோஜா
4. அண்ணாத்துரை
5. தமிழ்நாடு
6. பொதிகை மலை
7. நாகர் கோவில்
8. மதுரை
9. பலகாரம்
10. விசுவாசம்
11. திருவண்ணாமலை
12. வாகனம்
13. ஆகாயம்
14. துதிக்கை
15. திருக் கோவிலூர்
16. மத்தியானம்
17. ஜோதிடம்
18. கன்னியா குமரி
19. அவசரம்
20. விகடகவி
21. குடகு
22. விடுகதை
23. கல்வரம்
24. வான்கோழி
25. திருப்பதி
26. வதனம்
27. மூதுரை
28. உலக நீதி
29. மணிமேகலை
30. கோபால்
31. இரத்தினம்
32. செவ்வாய்
33. தாமரை
34. மல்லிகை
35. சீத்தா
36. மரகதம்
37. கருமான்
38. தம்பிடி
39. சாவித்திரி
40. அவரை
41. குதிரை
42. கழுதை
43. நாவல்
44. போதகம்
45. அடைக்கலம்
46. வெட்டுக் கிளி
47. சுவிசேஷம்
48. ஆகாயம்
49. இறைச்சி
50. மாமிசம்

# CHILDREN'S DELIGHT
# சிறுவர் அறிவுக் கதிர்
## (புதுப்பித்தல் விளக்கம்: RENEWAL)

தமிழ் நட்டாடின் தனிப்பெரும் அன்பர்களே !

உங்கள் யாவருக்கும் என் அன்பின் வணக்கத்தை முதன் முதலில் கூறிக்கொள்ளுகிறேன். பத்திரிகை நடத்துவது என்பது பெரும் பாறைக் கல்லைத் தலை மேல் தூக்கி வைத்து நடப்பதை ஒக்கும். பத்திரிகை நடத்திப் பணம் சம்பாதித்து வாழ்க்கை நடத்தலாம் என்பது பகற் கனவு: ஆயினும் என் மாணவர் பலர் நன்கொடை திரட்டித் தருவதாகவும், என் நண்பர்கள் பலர் தலைமை ஆசிரியர்களாக இருப்பதனால் தம் செல்வாக்கைச் செலுத்தி என்னைக் கைத் தூக்கி விடுவதாக வாக்களித்தமையாலும், இதனைப் புதுப்பிக்க முற்பட்டுள்ளேன்.

அதோடு ஏறக்குறைய அரை நூற்றாண்டு காலம் தமிழ் மொழியை மேல் நாட்டாருக்கும், 30ஆண்டுகளுக்கு மேலாகத் தமிழ் மொழியை ஆசிரியப் பணிக்குக் கற்கும் மாணவர்களுக்கும், உயர் நிலைப்பள்ளி மாணவர்களுக்கும், அநேகம் தமிழ் நூல்களைத் தமிழில் எழுதியும் அடைந்த அனுபவத்தில் கண்ட நுணுக்கங்களை என் அந்திய காலத்தில் பலருக்குப் பத்திரிகை மூலம் காட்ட வேண்டும் என்ற பேரவாவினாலும் இப்பத்திரிகையைப் புதுப்பித்து நடத்தப் போகிறேன்.

## (நன்கொடை FREE—WILL GIFT)

இதற்கு உங்கள் நன்கொடையும் உங்கள் மூலம், உங்கள் நண்பர்களின் நன்கொடையும் தேவை. சுமார் ரூ. 5,000, பெற உங்கள் கையை எதிர் பார்க்கின்றனன்.

## (சந்தா விவ்ரம் SUBSCRIPTION)

ஆண்டு சந்தா : ரூ. 3-50. ஆயுள் சந்தா : ரூ. 100. தனிப்பிரதி 30 பை. உங்கள் ஊர் ஏஜண்டுகளிடமும் புஸ்தகக் கடைகளிலும் கிடைக்கும்.

உங்களின் உதவியை நாடி நிற்கும் அன்பன்
K. J. வேதமுத்து

## TAMIL IDIOMS

தமிழ் அவியலும் அதிரசமும்

இச்சிறு நூல் ஒவ்வொரு உயர் நிலை, நடு நிலைப்பள்ளி மாணவர் மாணவிகள் கையிலும், தமிழ்மொழியைச் செவ்வனே கற்றுத் தேறுவதற்கு மிகமிக அவசியம் இருக்க வேண்டிய நூலாகும். இதன் கண் (1) மரபுத் தொடர்கள் (2) இணைமொழிகள் (3) ர, ற ; ந, ன, ண ; ல, ள, ழ பேதச் சொற்கள் (4) தொகைச் சொற்கள் (5) அடுக்குச் சொற்கள் (6) எதிர்ச் சொற்கள் முதலியனவும், பிறவும் அடங்கியுள்ளன. விலை. 55 பை.

## பாடசாலைத் தினசரி தெய்வப்பொது வணக்கப்பாடல்கள்

"ஒன்றே குலம் ஒருவனே தெய்வம்" என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு பள்ளிக்கூடங்களில் எந்த மதத்தைச் சேர்ந்தவர்களானாலும் பொதுவான ஒரு கடவுளைத் தேதி வாரியாக 31 நாட்களும் எல்லாருக்கும் தெரிந்த எளிய இராகத்தில் பாட கூடிய விதமாக இயற்றப் பெற்றது (1) தமிழ் நாட்டு அரசாங்கக் கவி இராமலிங்கம்பிள்ளை (2) கவியோகி சுத்தானந்த பாரதியார் : பிஷப்மார் களின் போற்றுரை கொண்டது. (விலை 50 பை)



கவனியுங்கள் ! உற்றுநோக்குங்கள் !!

எண்கள் அதிர்ஷ்டம் பரிசு உங்களுக்கும் கிடைக்கலாம். உடனே எங்களது இன்பப் பொழுது போக்கிற்கும், சிந்தனைக்கும் சிறந்த நூல்

## புதுமைப் புதிர்கள்

(5 பிரிவுகள் கொண்டது. இதுபோல் நூல் இது வரை வெளி வரவில்லை. (முதல் பதிப்பு)ரு 1·40 பை

## விடுகதைகள்

மூன்றும் பதிப்பு சிறியோர் பெரியோர் போற்றிப் புகழ்ந்தது விலை 55 பை. இது மூன்று பதிப்புகளானதே இதன் பெருமைக்கு அத்தாட்சி. இரண்டும் ஏக காலத்தில் வாங்கினால் ரு 1·75 எங்க ளிடம் மட்டும் கிடைக்கும். (மேற்கூறிய இரு நூல்களிலும் இருக்கும் அதிர்ஷ்ட எண்கள் பரிசு விவரம்

புதுமைப் புதிர்கள் 15 பேருக்குப் பரிசு ரு. 30
விடுகதைகள் 14 பேருக்குப் பரிசு ரு. 20

| புதுமைப் புதிர்கள் பரிசு | | | | | விடுகதைகள் பரிசு | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 5 பேர் | தலைக்கு | ரு 3 | வீதம் | ரு 15 | 4 பேர், | தலைக்கு | ரு 2 | வீதம் | ரு8 |
| 5 | ,, | ரு 2 | ,, | ரு 10 | 4 | ,, | ரு $1\frac{1}{2}$ | ,, | ரு6 |
| 5 | ,, | ரு 1 | ,, | ரு 5 | 6 | ,, | ரு 1 | ,, | ரு7 |
| 15 பேர் | | | பரிசு | ரு 30 | 14 பேர் | | | | 20 |

குலுக்கல் தேதி 1971 ஜூலை 31ம் தேதி

மொத்த ஆர்டருக்கு விலையில் $\frac{1}{4}$ பாகம் முன்பணத்துடன் ஆர்டர் செய்தால் 20% கழிவு உண்டு

### அருமைத் தோழன்

தமிழ்ப் பாடநூல் அரசாங்கம் 5-ம் வகுப்பு நூலை ஐந்தாம் வகுப்புப் பிள்ளைகள் தெள்ளத் தெளிய விளங்கிக் கொள்ள இயற்றிய துணை உரை நூல் இதனுள் ஐந்தாம் வகுப்புப் பிள்ளைகள் தமிழறிவுக்குத் தேவையான யாவும் இடம் பெற்றிருக்கிறது.

(விலை 60 பை)

### அதிரசம்

இது அரசாங்க 5-ம் வகுப்புத் தமிழ்ப் பாட நூல் முழுவதற்கும் ஆறு கேள்வித் தாள்கள். இங்கு தந்துள்ள நூல்களின் அதனதன் விலையை முன்பணமாக தபால் தலையாகவோ, மணியாடர் மூல மாகவோ அனுப்பிப் பெற்று கொள்ளலாம். 20% கழிவு உண்டு.

(விலை 15 பை)

முகவரி: பண்டிதர் K. J. வேதமுத்து
11, வெங்கடாத்திரி நாய்க்கன் தெரு,
குயப்பேட்டை, மதராஸ்–12.